ஏப்ரல் 2005

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



பயங்கரவாத மோடி: இந்தியாவின் அவமானச் சின்னம்

இதோ! நான் தான் அதிக சலுகை கொடுத்துள்ளேன்!

இல்லை! என் ஆட்சியில் தான் அதிக சலுகை கொடுத்துள்ளேன்!



## போலீசு விசுவாசத்துக்கு ஏலம்!

## மு.க. – ஜெயா போட்டா போட்டி!

# சக்கிலியனாப் பொறந்தா பீ திங்கணுமா?



"எம் பேரு கண்ணன். எங்கப்பா செருப்பு தைக்கிறவரு. சீவில்லிபுத்தூர் ரைட்டன்பட்டி காலனியிலதான் எங்க வீடு இருக்கு. எங்கூடப் பொறந்தவங்க ஆறு பேரு. வீட்டுல ரொம்ப கஷ்டம். அதனால, ராஜஸ்தானுல கோட்டாங் கிற டவுனுல குமான்புரா தெருவுல இருக்குற சீவில்லிபுத்தூர்காரர் வெள் ளைச்சாமியோட கடலமிட்டாய் கம்பெ னிக்கு வேலைக்குப் போனேன். என் னோட எங்க காலனியில இருக்குற முனியாண்டியும் வீரய்யாவும் வேலைக்கு வந்தாங்க.

மூணு வேளை சோறு போட்டு வரு சத்து 7000 ரூபா தர்றதா சொன்னாங்க. ஆனா அங்க தண்ணி கூட எங்கள குடிக்க விடல. தண்ணி குடிச்சா அடிக் கடி ஒண்ணுக்கு போவோம், அதனால வேல கெட்டுப் போகும்னாங்க. எங்கள கஷ்டமான வேலையெல்லாம் செய்யச் சொன்னாங்க. முடியலன்னா போட்டு அடிப்பாங்க. ரெண்டு நேரம் பழைய கஞ்சித் தண்ணிதான் ஆகாரம். அங்கெல்லாம் சனங்க மாட்டுக்கு ரொட்டி குடுக்கறாங்க. அதுகூட எங்க ளுக்கு இல்ல. விடியற நேரம் மூணு லேர்ந்து நாலு மணி வரைக்கும்தான் தூங்க விடுவாங்க. சரியா வேலை செய் யலைன்னு என்ன கயித்துல கட்டி நெருப்பு வைச்சு கொளுத்தப் பார்த் தாங்க. நான் பயந்து அலறுனேன்.

ரெண்டு மாசத்துக்கு முந்தி, எனக்கு அவசரமாக கக்கூசு போகணும்னு சொன்னப்ப, என்னப் போட்டு அடிச் சாங்க. எனக்கு அவசரமா இருந்ததால கக்கூசுக்கு ஓடப் பார்த்தேன். என்னைப் புடிச்சி அடிச்சி சங்கிலியால கட்டிப் போட்டாங்க. என்னால தாங்க முடி யாம அங்கேயே கழிஞ்சிட்டேன். அத னால வெள்ளச்சாமியும் அவரு மக னும் சேர்ந்துகிட்டு என்னய அடிச்சி, ஒரு கப்புல மூத்திரத்தப் பிடிச்சு என்னக் குடிக்க வெச்சாங்க. என்னய போட்டு மிதிச்சு நான் கழிச்ச மலத்தையே என் னையே திங்க வெச்சாங்க. சக்கிலியன் பீ திங்குறது புதுசான்னாங்க.

அதுக்கு மேல என்னால தாங்க முடி யல. அடுத்த நாளு நான் தப்பி ஓடப் பார்த்தேன். தெருவுல ஓட ஓட விரட்டி என்ன உருட்டுக் கட்டையால அடிச் சான் வெள்ளச்சாமி. ரத்த வெள்ளத்துல நான் மயங்கிக் கெடக்குறதப் பார்த்த உள்ளூரு சனங்க, போலீசுல புகார் குடுத்தாட்டாங்க. நெலமையப் புரிஞ்சி கிட்ட வெள்ளச்சாமி ஆளுங்க எங்க மூணு பேரையும் ரயிலேத்தி எங்க ஊரு சக்கிலித் தெருவாண்ட விட்டுட்டு ஓடிட்டாங்க.

எனக்கு நியாயம் கெடைக்கணும். நான் சக்கிலியனாப் பொறந்தது தப்பா? சக்கிலியனாப் பொறந்தா பீ திங்கணுமா?''

•••

அருந்ததியர் சாதியைச் சேர்ந்த இளம் சிறுவர்களைக் கொத்தடிமை களாக்கிக் கொடூரமாக வதைத்ததோடு வன்கொடுமையையும் ஏவிய சாதி வெறி பிடித்த வெள்ளைச்சாமி வகைய றாக்கள் இன்றுவரை கைது செய்யப்பட வில்லை. தென் மாவட்டங்களிலிருந்து வடமாநிலங்களுக்கு கொண்டு செல் லப்பட்டுக் கொத்தடிமைகளாக உழ லும் ஆயிரக்கணக்கான சிறுவர்களின் நிலைமைக்கு இன்னுமொரு சாட்சியம் தான் இந்தக் கொடூரம். இக்கொத்தடி மைத்தனத்திற்கும் சாதிவெறி வன் கொடுமைக்கும் எதிராக 23.2.05 அன்று அருந்ததியர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக திருவில்லிபுத் தூர் காமராசர் சிலை அருகில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தகவல்:
நந்தன், திருவில்லிபுத்தூர்.




இப்போது விற்பனையில்...

## சிதம்பர இரகசியம்!




சிதம்பரத்தின் மோசடி பட்ஜெட்டைத் திரை கிழித்துக் காட்டுவதோடு, மறுகாலனியாதிக்கம் எனும் பேரபாயம் நாட்டையும் மக்களையும் சூழ்ந் திருப்பதை விளக்கிக் காட்டும் பிரசுரம்.

வெளியீடு:
ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு. - பு.ஜ.தொ.மு.

விலை: ரூ. 2/-

பிரதிகள் கிடைக்குமிடம்:
இரா. சீனிவாசன், புதிய கலாச்சாரம், 18, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற் சாலை, அசோக்நகர், சென்னை - 600 083.
✆: 044 - 2371 8706

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 20**

**இதழ் 6**

ஏப்ரல் 2005

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**



**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# போலீசு விசுவாசத்துக்கு ஏலம்! மு.க. - ஜெயா போட்டா போட்டி!

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, தனது சிந்தனைப் போக்கை (பார்ப்பன பாசிஸ்டுகளின் சிந்தனைப் போக்கை என்றும் கருதலாம்) மிகவும் தெளிவாகக் கடந்த மாதம் சட்டப்பேரவையில் கூறியிருக்கிறார். ''நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது காவல்துறை. வலிமையான நாடாக இந்தியா இருக்க வேண்டும்; அதில் வளமிக்க மாநிலமாக தமிழகம் திகழ வேண்டும் என்ற லட்சியம் ஈடேற வேண்டுமென்றால், தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டும். எந்த வளர்ச்சிக்கும் முதல் தேவையாக இருப்பது அமைதியான சூழ்நிலைதான். அத்தகைய அமைதிச் சூழ்நிலையை உருவாக்குவதிலும், அதனைக் கட்டிக் காப்பதிலும் காவல்துறையின் பணி இன்றியமையாதது. இதன் அடிப்படையில்தான் காவல்துறையை நவீனப்படுத்தவும், காவல்பணியை மேம்படுத்தவும், காவலர்கள் நலன்பேணவும் பல்வேறு திட்டங்கள், சலுகைகள், உதவிகள் ஆகியவற்றை நான் அறிவித்தேன்.''

விவசாயம் மற்றும் தொழிற்துறைக்குத் தேவையான உள்கட்டுமான வசதிகளைப் பெருக்குவது; கல்வி, மருத்துவம், குடிதண்ணீர், குடியிருப்பு முதலிய வசதிகளை உழைக்கும் மக்களுக்கு உறுதிப்படுத்துவதன் மூலம் மனித வளத்தை மேம்படுத்துவது; உற்பத்தியைப் பெருக்குவதைப் போலவே நாட்டு மக்களின் வாங்கும் சக்தியையும் விரிவுபடுத்தி சந்தையைப் பெருக்குவது - இவைதான் வளமிக்க, வலிமையான நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது என்று ஆக்கப்பூர்வமான முறையில் அதிகாரத்திலுள்ள ஜெயலலிதா சிந்திக்கவில்லை. வளர்ச்சியின் பலன்கள் அனைவருக்கும் - குறிப்பாக, நாட்டின் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களுக்குச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதன் மூலம் அமைதிச் சூழ்நிலையை உருவாக்கி நாட்டை அமைதிப் பூங்காவாக்கிப் பராமரிப்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கவில்லை. அதனால்தான், காவல்துறை என்று தவறான பொருளில் அழைக்கப்படும் போலீசின் வலிமையை - அதிகாரத்தைப் பெருக்கி, நவீனப்படுத்தி, ஆயுத - தளவாடங்களை மேம்படுத்தி, போலீசின் நலன்களைப் பேணப் பல்வேறு திட்டங்கள், சலுகைகள், உதவிகளை செயல்படுத்தி வருகிறார், ஜெயலலிதா. ''வளர்ச்சியின் பலன்கள்'' மறுக்கப்படும் உழைக்கும் மக்கள் பொங்கி எழுந்தால், அவர்களை அடக்கி ஒடுக்கி அமைதிச் சூழலை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் வேட்டை நாய்களுக்கு கொழுத்த தீனி போட்டு வைப்பதைப் போல போலீசு படையை எந்நேரமும் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற பாசிச முறையிலேயே சிந்திக்கிறார்.

கோடிகோடியாகக் குவித்து வைத்திருக்கும் கள்ளப் பணத்துக்கு அடுத்து ஜெயலலிதா நம்புவது போலீசைத்தான். வேறு எந்த ''சிவிலியன்'' அரசு அதிகார வர்க்கத்தைக் கூட அவர் நம்புவதில்லை. எனவேதான், குடிநீர், சாக்கடை, போக்குவரத்து, ரேசன் கடை, வெள்ளம் - புயல் - சுனாமி நிவாரணம் ஆகிய எதற்காக மக்கள் போராடினாலும், பிரச்சினையைக் கையாள்வதற்கு ஜெயலலிதா அரசு ஏவிவிடுவது போலீசு அதிகாரிகளைத்தான். அதற்காகவே சமூக நலப் பணிகளுக்காக என்ற பெயரில் ஊர் முழுக்கவும் சந்து பொந்துகளில் எல்லாம் போலீசு சாவடிகளைத் திறந்து வைத்துக் கொண்டும், போலீசு கார்களில் ரோந்து சுற்றிக் கொண்டும் குடிமக்களைக் கண்காணிக்கும் ஏற்பாட்டை இந்த அரசு செய்திருக்கிறது. ஆனால், போலீசு நடவடிக்கைகளின் பதிவேடுகள் காட்டுவதென்ன? கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் நாளும் பெருகி வருவதோடு, பல்வேறு வழக்குகளிலும் கிரிமினல் குற்றக் கும்பல்களுக்கும் போலீசுக்கும் கள்ளக் கூட்டுகள் உள்ளன. போலீசே, கொலை, கொள்ளை, வழிப்பறி, மோசடி, பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டு வருகிறது. தலைமைப் போலீசு அதிகாரி (டி.ஜி.பி), மாநகர ஆணையர் முதல் எல்லா மட்டங்களிலும் குற்றச் செயல்களில் சிக்கியுள்ளனர். சிவகாசி ஜெயலட்சுமி விவகாரம் ஒரு எடுத்துக்காட்டுதான். நீதிமன்றங்களில் போலீசாரின் யோக்கியதை அம்பலமாகி நாடே நாறுகிறது.

இருந்தாலும், அரசியல் எதிரிகளை மட்டுமல்ல, செரினா, சுதாகரன் கஞ்சா வழக்குகள் போன்று ஆட்சியாளர்களின் உள்விவகாரங்களுக்குக் கூட விசுவாச ஊழியஞ் செய்பவர்களாக போலீசார் விளங்குகின்றனர். இதனால்தான், தமிழகத்தின் கருவூலமே ஜாலியாகிவிட்டதென்று கூறி 4000 கோடி ரூபாய்க்கு மேல் மக்கள் மீது சுமையேற்றியதோடு, உழைக்கும் மக்களின் உரிமைகளை மறுத்து அடக்கி ஒடுக்கியபோதும், ஜெயலலிதா தமது செல்லப்பிராணிகளுக்கு கொழுத்த தீனி போடத் தவறவில்லை. இதன் தொடர்ச்சியாக — அதுவும் கேள்வியோ விளக்கமோ கோர முடியாத சட்டமன்ற விதியின் கீழ் அறிக்கை வாசித்து — இந்த ஆண்டும் 36 கோடி ரூபாய்க்கு போலீசுக்கான ''படிகளை'' உயர்த்தியிருக்கிறார், ஜெயலலிதா. போலீசு குறித்த தனது பார்வையும் இதுதான் என்று அறிவித்து, ஜெயலலிதாவையும் விஞ்சி விட எத்தணிக்கிறார் கருணாநிதி. காவல்துறை ஆட்சியாளர்களின் ஏவல் துறை ஆகிவிட்டது என்று இதுவரை புலம்பி வந்த கருணாநிதி, இப்போது போலீசுக்காக பரிந்து கொண்டு, மேலும் அதிக சலுகைகள் வழங்க வேண்டும் என்று வாதிடுகிறார். அடுத்து தானும் தன் வாரிசும் ஆட்சியாளர்களாக இருக்கும்போது விசுவாசமான ஏவல் துறையாக காவல்துறை விளங்க வேண்டும் என்றுதான் இப்போதிருந்தே கவலைப்படுகிறார் போலுள்ளது! ●

www.padippakam.com

## பயங்கரவாத மோடி

# இந்திய நாட்டின் அவமானச் சின்னம்

“மதச் சுதந்திர உரிமைகளை நேரடியாகவோ / மறைமுகமாகவோ மீறும் எந்தவொரு அந்நிய நாட்டு அதிகாரிக்கும், விசாவினை (நுழைவுச் சீட்டு) மறுக்கலாம்'' என்ற அமெரிக்க சட்டத்தின்படி, குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு வழங்கியிருந்த வர்த்தக / சுற்றுலா விசாவினை அமெரிக்கா ரத்து செய்திருக்கிறது.

''மோடியின் அமெரிக்க பயணம் அரசுமுறை பயணம் அல்ல. அதனால் அவருக்கு அரசுமுறை விசாவும் வழங்க முடியாது' என மறுத்துவிட்டது, அமெரிக்க அரசு.

குஜராத்தில் கொத்துக் கொத்தாக முசுலீம்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, விசுவ இந்து பரிசத்தின் குஜராத் மாநிலத் தலைவர் கேசவ்ராம் காசிராம் சாஸ்திரி, ''ஆம். நாங்கள் திட்டமிட்டுத்தான் கலவரம் நடத்தினோம்'' எனப் பகிரங்கமாகவே பேட்டி கொடுத்தார். இந்த இனப்படுகொலையின் தளபதி நரேந்திர மோடிதான் என்பதை கலவரத்துக்குப் பின் கோவாவில் நடந்த பா.ஜ.க.வின் உயர்மட்டக் கூட்டம் மறைமுகமாக ஒப்புக் கொண்டிருக்கிறது. இவை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நம் கண் முன் நடந்தவை.

இந்த சமீபத்திய வரலாற்று உண்மைகளை முசுலீம் பிணங்களோடு போட்டுப் புதைத்துவிட்டு, ''எந்த நிரூபணமும் இல்லாமல், அரசியல் கட்சிகளும், மத்திய அரசும், அதன் அமைச்சர்களும், பத்திரிகை உலகமும் நரேந்திர மோடிக்கு, குஜராத் கலவரங்களைப் பின் நின்று நடத்தி, அந்தக் கொலைகளுக்குக் காரணமானவர் என்ற முத்திரையைக் குத்தி விட்டன... அமெரிக்காவிற்கு இந்த முத்திரை பயன்பட்டது.... அமெரிக்க நடவடிக்கை கண்டிக்கத் தகுந்தது'' எனப் பொய்யைக் கக்கி, மோடிக்கு வக்காலத்து வாங்குகிறார், துக்ளக் ''சோ''.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலோ இன்னும் ஒருபடி மேலே போய், மோடிக்கு விசா மறுக்கப்பட்டதை, ''இந்திய அரசியல் சாசனத்திற்கும், இந்திய மக்களுக்கும் நேர்ந்துவிட்ட அவமானமாகவும், இந்திய நாட்டிற்கு ஏற்பட்ட இழுக்காகவும்'' ஊதிப் பெருக்குகிறது.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் இராணுவ மந்திரியாக இருந்த ஜார்ஜ் பெர்ணான்டசு, அமெரிக்க விமான நிலையம் ஒன்றில், ''சோதனை'' என்ற பெயரில் துகில் உரியப்பட்டார். ஒரு கிறித்தவ இந்திய அமைச்சருக்கு நேர்ந்த அவமானத்தை, இந்திய அரசியல் சாசனத்திற்கு நேர்ந்த அவமானமாக பா.ஜ.க. அரசு கருதவில்லை. மாறாக, ''அது அமெரிக்காவின் சட்டம்'' என்று சொல்லி, அவமானத்தைச் சகித்துக் கொண்டார்கள்.

உலக வர்த்தக மையக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்ட பின், இந்தியா உள்ளிட்ட சில ஏழை ஆசிய கண்டத்து நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்குச் செல்லும் அனைவரும், தங்களின் கைரேகைகளை அமெரிக்க அதிகாரிகளிடம் பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டத்தை அமெரிக்கா கொண்டு வந்தது. இரவு நேரத்தில் சந்தேகத்தில் பிடித்துக் கொள்ளும் நபர்களின் கைரேகைகளை போலீசார் பதிவு செய்து கொள்கிறார்களே, அதற்கும் அமெரிக்காவின் சட்டத்திற்கும் பெரிய வேறுபாடு எதுவும் கிடையாது.

இந்திய நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் தீவிரவாதியாகச் சந்தேகிக்கும் இந்தச் சட்டத்தை பா.ஜ.க., அவமானமாகப் பார்க்கவில்லை. ஆனால், இந்துமத பயங்கரவாதி மோடிக்கு விசா மறுக்கப்பட்டதை அரசியல் சாசனத்தின் அவமானமாக ஒப்பிடுகிறது. அப்படியென்றால், மோடி என்ற கேடியைக் காப்பாற்றுவதுதான் அரசியல் சாசனத்தின் வேலையா?

இந்தக் கேள்விக்கு பா.ஜ.க. மட்டுமல்ல, 'மதச்சார்பற்ற, காங்கிரசும் கூட ''ஆம்'' என்று தான் பதில் அளிக்கிறது. ''மோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; குஜராத் மாநிலத்தின் முதல் மந்திரி; குஜராத் கலவரங்களுக்காக அவர் எந்தவொரு இந்திய நீதிமன்றத்தாலும் தண்டிக்கப்படவில்லை; எனவே, அவருக்கு விசா மறுக்கப்பட்டதை அமெரிக்கா மறுபரிசீலனை செய்ய வேண்டும்'' என இந்திய அரசின் சார்பாகவே அமெரிக்காவிடம் வேண்டுகிறார்கள்.

2,000 முசுலீம்களைக் கொன்ற மோடி, சட்டப்படி

மோடியின் ஆசியோடு இந்துமதவெறி ஆர்.எஸ்.எஸ். கும்பல் நடத்திய முசுலீம் இனப்படுகொலை கலவரத்தின் இரத்த சாட்சி.




படிப்பகம்

www.padippakam.com

ர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் என் து இந்திய அரசியல் சாசனத்தின் ஓட்டாண்டித்தனத்தைத் தான் காட்டுகிறது.

''இந்து என்பது மதமல்ல; அது ஒரு வாழ்க்கை முறை'' என உச்சநீதி மன்றம் ஒரு தீர்ப்பில் சொல்லியிருக்கிறது. இதைத்தான் பா.ஜ.க., இந்துத்துவா என்கிறது.

ராமர் கோவில் கட்டுவதற்காகச் செதுக்கப்பட்ட தூண்களை பாபர் மசூதி வளாகத்தில் வைத்துப் பூசை செய்ய வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். ஆர்ப்பாட்டம் செய்தபொழுது, உச்ச நீதி மன்றம் அப்பூசையைத் தடை செய்யவில்லை. மாறாக, வளாகத்திற்கு வெளியே பூசை நடத்திக் கொள்ளுங்கள் என்ற சந்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இப்படி பலவிதங்களில் ஆர்.எஸ்.எஸ்.-க்கு அனுசரணையாக நடந்து கொள்ளும் நீதி மன்றங்கள் மோடியைத் தண்டிக்க வேண்டும் என்றால், சூரியன் மேற்கே தான் உதிக்க வேண்டும். மோடி தண்டிக்கப்படாமல் இருப்பது தான் அவமானமேயொழிய, அவருக்கு அமெரிக்கா விசா மறுக்கப்பட்டிருப்பது அவமானத்திற்குரியதல்ல!

கொலை செய்யப்பட்ட பொழுது, அதைக் கண்டித்து ஒரு அறிக்கைகூட விடவில்லை. இதற்குக் காரணம், குஜராத் கலவரம் நடந்தபொழுது ஆட்சியில் இருந்த வாஜ்பாயி அரசுக்கும், ஜார்ஜ் புஷ்ஷுக்கும் இடையே இருந்த நெருக்கம்தான்.

அமெரிக்காவில் உண்டியலைக் குலுக்கி வசூலிக்கப்பட்ட டாலர்கள், குஜராத் கலவரத்திற்குப் பயன்படுத்தப்பட்டன என்பதை பல்வேறு அமைப்புகள் அம்பலப்படுத்தியுள்ளன. ஆனாலும், விசுவ இந்து பரிசத் அமெரிக்காவில் உண்டியல் குலுக்குவதை இன்று வரை புஷ் தடை செய்யவில்லை.

ரிக்கா, கம்யூனிஸ்டுகள், இடது சாரி - முற்போக்கு சிந்தனை கொண்டவர்களுக்கு ''விசா'' வழங்க மறுப்பதை அரசியல் தந்திரமாகவே கடைப்பிடித்து வருகிறது. அமெரிக்காவின் இந்த இரட்டை வேடத்தைப் பற்றி பா.ஜ.க. என்றைக்காவது வாயைத் திறந்ததுண்டா?

அமெரிக்காவின் நலன்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்பவர்கள் யாராக இருந்தாலும் - அவர்கள் மதச் சர்வாதிகாரியாக இருந்தாலும் - அவர்களுக்கு விசா வழங்க எந்தத் தடையும் இல்லை என அமெரிக்க சட்டமே கூறுகிறது. அதனால்தான், அத்வானி, வாஜ்பாயி வகையறாக்களின் விசா ரத்து செய்யப்படவில்லை. மோடியின் விசா ரத்து செய்யப்பட்டிருப்பது ஒரு விதி விலக்கு. நமது நாட்டு நீதிமன்றங்கள் மனித உரிமைகளை மீறிய போலீசு அதிகாரிகளை அதிசயமாகத் தண்டிப்பது போல!

•••

ஈராக் ஆக்கிரமிப்பு, அபு - கிரைப் சிறைச்சாலை சித்திரவதைகள் - இவற்றைக் காட்டி, மனித உரிமை பற்றிப் பேச அமெரிக்காவுக்குத் தகுதியில்லை என வாதாடுகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல். ஈயத்தைப் பார்த்து பித்தளை இளித்த கதைதான் இது.



மோடிக்கு விசா மறுக்கப்பட்டதைக் கண்டித்து, மும்பையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன் பா.ஜ.க. நடத்திய ஆர்ப்பாட்டம்.

•••

''சவூதி அரேபியா, ஈரானில் எல்லாம் மதவெறி ஆட்சி நடக்கிறது. பாகிஸ்தான், வங்காள தேசத்தில் சிறுபான்மை இந்துக்கள் கொல்லப்படுகிறார்கள். அந்நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களுக்கு விசாவை மறுக்காத அமெரிக்கா, மோடிக்கு மட்டும் மறுத்திருக்கிறது'' என அமெரிக்காவின் இரட்டை வேடத்தை பா.ஜ.க. அம்பலப்படுத்துகிறது.

அமெரிக்காவின் இந்த இரட்டை வேடத்தினால் பா.ஜ.க.வும்தான் பலன் அடைந்திருக்கிறது. கொசாவாவில் முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டதைச் சாக்காக வைத்து, யுகோஸ்லாவியா நாட்டின் மீது அமெரிக்கா போரே தொடுத்தது. அதே அமெரிக்கா, குஜராத்தில் முசுலீம்கள் படு

'சுதந்திரத்துக்கு' முன்னும் பின்னும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் நூற்றுக்கணக்கான மதவெறிக் கலவரங்களை நடத்தியிருக்கிறது. மதச் சுதந்திரத்துக்கே வேட்டு வைக்கும் மதமாற்றத் தடைச் சட்டம் இந்தியா முழுவதும் கொண்டு வரப்பட வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்.-இன் கொள்கை. இதன்படி பார்த்தால் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களைச் சேர்ந்த அனைவருக்குமே ''விசா'' மறுக்கப்பட வேண்டும். ஆனால், அமெரிக்காவோ மோடிக்கு மட்டும் விசாவை மறுத்துவிட்டு, எங்களுக்கும், பா.ஜ.க.விற்கும் இடையே நல்ல உறவு இருப்பதாக அறிக்கை விடுகிறது.

இந்தியாவின் அத்வானி, இசுரேலின் ஏரியல் ஷரோன் போன்ற மத வெறி பிடித்த அரசியல் தலைவர்களுக்குக் கூட ''விசா'' வழங்கி வரும் அமெ

இந்திய மக்களின் சட்டபூர்வ மனித உரிமைகள் அனைத்தையும் பறிப்பதற்காகவே ''பொடா'' என்ற கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் பா.ஜ.க. கட்சியினர். மனித உரிமைப் போராளிகள் இச்சட்டத்தை எதிர்த்த பொழுது, அமெரிக்காவிலும் இது போன்ற சட்டம் - பேட்ரியாட் சட்டம் - கொண்டு வந்திருப்பதாகக் கூறி நியாயப்படுத்தினார்கள்.

இது மட்டுமின்றி, ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுக்கத்திட்டம் போட்ட பொழுது, தீவிரவாதத்துக்கு எதிரான போரில் தன்னை இளைய பங்காளியாகச் சேர்த்துக்


படிப்பகம்

www.padippakam.com

கொள்ள வேண்டும் என பா.ஜ.க. கூட்
டணி ஆட்சி மன்றாடியது.

அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்த
பின், அமெரிக்காவின் தயவில் இந்தி
யத் தரகு முதலாளிகளுக்கு வியாபார
ஒப்பந்தம் வாங்கித் தருவதற்காக,
''அமெரிக்காவுக்கு உதவ ஈராக்கிற்கு
இந்தியப் படைகளை அனுப்புவதாக''
புஷ்ஷிடம் வாக்குறுதி கொடுத்தார்,
அத்வானி. உள்நாட்டு எதிர்ப்பின் கார
ணமாக படைகளை அனுப்ப முடியா
மல் போனதால், முன்னாள் இராணுவ
வீரர்களைக் கூலிப் படைகளாக ஏற்று
மதி செய்ய பா.ஜ.க. கூட்டணி ஆட்சி
அனுமதித்தது.

இப்படி அமெரிக்காவின் உலக
மேலாதிக்கத்திற்கு அடியாளாக
வேலை செய்ய விருப்பம் கொண்ட
இந்து மதவெறிக் கும்பல், ''மனித உரி
மைகளை மீறிய அமெரிக்க அதிகாரிக
ளுக்கு இந்தியா விசாவை மறுத்தால்
என்னவாகும்?'' எனச் சவால் விடுகி
றது.

ஒருவேளை அப்படி நடந்து விடுகி
றது எனக் கற்பனை செய்து கொள்
வோம். பிறகு, அந்நிய நிதி மூலதனத்
தையும், தொழில்நுட்பத்தையும் பெறு
வதற்கு இந்தியா எந்த நாட்டிடம்
கையேந்தி நிற்க முடியும்?

1994-இல் நடந்த மகாராஷ்டிரா
சட்டசபை தேர்தலின் பொழுது, அமெ
ரிக்க என்ரான் நிறுவனத்தை அரபிக் கட
லில் தூக்கியெறிவோம் எனச் சவடால்
அடித்தது, பா.ஜ.க. ஆனால், அந்தத்
தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்த
பின், என்ரானின் இரண்டாவது மின்
திட்டத்திற்கும் சேர்த்தே அனுமதி
கொடுத்தது.

வாஜ்பாயின் ஆட்சியில் அணு
குண்டு வெடித்த பொழுது, அமெரிக்கா
இந்தியா மீது அணு ஆராய்ச்சி சம்மந்த
மான பொருளாதாரத் தடைகளை
விதித்தது. அந்நியப் பொருட்கள் இறக்
குமதிக்கு இந்தியாவில் உள்ள தடை
களை நீக்கி விடுகிறோம் என அமெரிக்
காவோடு பேரம் நடத்திதான்,
பொருளாதாரத் தடையை நீக்கச் செய்
தது, வாஜ்பாயி அரசு. இதுதான்
பா.ஜ.க.வின் கடந்தகால அமெரிக்க
எதிர்ப்பு வீர வரலாறு!

மோடிக்கு விசா வழங்கப்பட்டதை
எதிர்த்து அகமதாபாத் நகரில் நடந்த
பேரணியில், ''நமது நாட்டின் சட்டம்
இப்படி இருக்க வேண்டும்; நமது நாட்
டின் பாடநூல்கள் இப்படி இருக்க
வேண்டும் என அமெரிக்கா கட்டளை
யிடுவதா?'' என்று கொதிப்போடு பேசி



**இன்று, போர் குற்றவாளி ஜார்ஜ் புஷ்ஷைத் தண்டிக்கக் கோரி போராடும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள், நாளை, மோடியையும் தண்டிக்கக் கோரி போராடினால், அதை நாம் வரவேற்கத் தான் வேண்டும்.**

னாராம் மோடி. பா.ஜ.க., இந்தப் பேர
ணிக்கு ''சுயமரியாதை பேரணி'' எனப்
பெயரிட்டிருந்தது.

அமெரிக்கா உத்திரவு போட்டு காப்
புரிமைச் சட்டம் திருத்தப்பட்ட
பொழுது; அமெரிக்கா உத்திரவு
போட்டு தொழிலாளர் நலச் சட்டங்கள்
திருத்தப்பட்டபொழுது பா.ஜ.க.வின்
சுயமரியாதை எங்கே ஒளிந்து கொண்
டிருந்தது?

''குஜராத்தில் நடந்த கலவரம் இந்தி
யாவின் உள்நாட்டு விவகாரம். அதில்
தலையிட்டுத் தீர்ப்புச் சொல்ல அமெ
ரிக்காவிற்கு அதிகாரம் கிடையாது''
என பா.ஜ.க.வோடு சேர்ந்து கொண்டு
காங்கிரசும் தர்க்க நியாயம் பேசுகிறது.

இந்திரா காந்தியின் அவசரநிலை
காட்டாட்சியை முடிவுக்குக் கொண்டு
வர அமெரிக்கா தலையிட்டதை,
ஆர்.எஸ்.எஸ். கும்பல் வரவேற்றிருக்
கிறது. கார்கில் போரை முடிவுக்குக்
கொண்டுவர, கிளிண்டனோடு இரகசி
யப் பேச்சு வார்த்தை நடத்தினார், வாஜ்
பாயி. இவையெல்லாம் சர்வதேசப்
பிரச்சினைகளா?

இந்த உள்நாட்டு
ஈராக் நாட்டிற்கும், ஆப்
கும் பிரயோகித்தால்,
படைகளை அந்நாடுகளில்
வெளியேறச் சொல்ல சே
அந்த நாணயம் காங்கிரசு, ப
விடம் உண்டா?

அமெரிக்கா சதாமை சர்வாதிக
எனக் குற்றம் சாட்டியபொழுது
''அதை ஈராக் மக்கள்தான் தீர்மானிக்க
வேண்டும்; அதில் அமெரிக்கா தலையி
டக் கூடாது'' என மோடியோ, அத்வா
னியோ எதிர்த்துப் பேசியதுண்டா?
மாறாக, ''சதாமை நீங்கள் தண்டிக்க
விரும்பினால், ஐ.நா.வின் ஒப்புத
லோடு தண்டியுங்கள்'' என்றுதான்
அமெரிக்காவிடம் மன்றாடினார்கள்.

இன்றுள்ள உலகச் சூழலில், சில
பிரச்சினைகளை உள்நாட்டு பிரச்சினை
கள் என ஒதுக்கி விட முடியாது. தென்
னாப்பிரிக்காவில் நடந்த வெள்ளை இன
வெறி அரசு கருப்பின மக்களுக்கு எதி
ராக நிறவெறிக் கொள்கையைக்
கடைப்பிடித்த பொழுது, அந்நாட்டை
உலக நாடுகள் கண்டித்ததோடு, அந்
நாட்டோடு வர்த்தக - அரசியல் உறவு
கள் வைத்துக் கொள்ளாமல் புறக்கணித்
தன. பாலஸ்தீன மக்களுக்குச் சொந்த
மான பூமியை முழுமையாக ஆக்கிர
மித்துக் கொள்ளும் நோக்கத்தோடு இசு
ரேல் கட்டிவரும் சுவரை, இடித்துத்
தள்ள வேண்டும் என சர்வதேச நீதிமன்
றம் உத்திரவிட்டுள்ளது. போஸ்னியா
விலும், கொசாவாவிலும் முசுலீம்
களை இனப்படுகொலை செய்த
யுகோஸ்லாவியாவின் முன்னாள் அதி
பர், அந்தக் குற்றங்களுக்காக சர்வதேச
நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுகிறார்.

குஜராத்தில் நடந்த இனப்படு
கொலை கூட, சர்வதேச நீதிமன்றத்தில்
விசாரிக்கப்பட வேண்டிய அளவிற்குக்
கொடூரமானவைதான். இந்த இனப்படு
கொலையின் தளபதியான மோடியை
இந்தியச் சட்டங்கள் தண்டிக்க மறுக்கும்
பொழுது, அவனைத் தண்டிக்கக்
கோரும் உரிமையை அமெரிக்க அர
சிற்கு (அதனின் இரட்டை வேடம் கார
ணமாக) வேண்டுமானால் மறுக்கலாம்.
ஆனால், உலக மக்கள் அப்படிக் கோரு
வதைத் தடுக்கும் உரிமை யாருக்கும்
கிடையாது. இன்று, போர் குற்றவாளி
ஜார்ஜ் புஷ்ஷைத் தண்டிக்கக் கோரி
போராடும் பல்வேறு நாடுகளைச்
சேர்ந்த மக்கள், நாளை, மோடியையும்
தண்டிக்கக் கோரி போராடினால், அதை
நாம் இருகரம் கூப்பி வரவேற்கத்தான்
வேண்டும்.

• முத்து


படிப்பகம்

www.padippakam.com

## ிவகங்கை வலது கம்யூனிஸ்ட் கட்சியின் வண்டவாளம்:
# அகிலாண்டபுரத்தை அழுக்கிய புராணம்

பிப்ரவரி புதிய ஜனநாயகம் இதழில் அல்லிவயல் கிராமத்
.ச் சேர்ந்த செல்லக்கண்ணுவுக்கு சிவகங்கை வலது கம்யூ
ஸ்ட் கட்சியின் முக்கியப் புள்ளியும் விவசாயிகள் சங்க
நிலத் தலைவருமான குணசேகரன் கும்பலால் இழைக்கப்
ட்ட அநீதியை அம்பலப்படுத்தி ஒரு கட்டுரை வெளிவந்தது.
தைத் தொடர்ந்து, அல்லிவயல் பிரச்சினையில் வி.வி.மு.வின்
உறுதியான போராட்டத்தைக் கண்டு உத்வேகமடைந்த பல்
வேறு சக்தியினர், குணசேகரன் கும்பலின் அடுக்கடுக்கான தில்
லுமுல்லு - மோசடிகளை ஆதாரபூர்வமாக அளித்த வண்ண
முள்ளனர். குறிப்பாக, வலதுகளின் கோட்டையாகச் சித்தரிக்கப்
படும் மறவமங்கலத்தில், குணசேகரன் கும்பலின் சவால்கள் -
அச்சுறுத்தல்களை மீறி எழுச்சியுடன் நடந்தேறிய வி.வி.மு.வின்
தொடக்கவிழா நிகழ்ச்சியால் புதிய நம்பிக்கையைப் பெற்று,
வலதுகளின் கட்சிக்குள் 'ஒதுங்கி' இருக்கும் சில முக்கிய புள்ளி
கள்கூட வி.வி.மு. தோழர்களிடம் தகவல்களை அளித்து வரு
கின்றனர். இவற்றில் முக்கியமான ஒன்றுதான் குணசேகரன் கும்
பலின் ''அகிலாண்டபுரத்தை அழுக்கிய புராணம்!''

சிவகங்கை நகராட்சிக்கு உள்பட்ட அகிலாண்டபுரம் தாழ்த்
தப்பட்ட மக்கள் வாழும் பகுதி. இதன் தெற்குப்புறமாக அரசு
மருத்துவமனை உள்ளது. இதற்குக் கிழக்கே பல பத்து ஏக்கர்
நிலப்பரப்பு உள்ளது. இது ராஜவம்ச ஜமீன்களுக்குச் சொந்தமா
னது எனச் சில ஆவணங்கள் இருந்தாலும், இந்து அறநிலையத்
துறை கணக்குகளின்படி, சுமார் 1 ஏக்கர் நிலப்பிரப்பில் கூனங்
குண்டு எனும் ஊரணியும், சுமார் 0.30 செண்ட் பரப்பளவில் சுடு
காடும், மருத்துவமனையின் கிழக்குப் புற காம்பவுண்ட் சுவரை
ஒட்டி தெற்கே உள்ள இந்திரா நகருக்குச் செல்ல ஒரு பொதுப்
பாதையும் இருப்பது வரை படங்களில் தெளிவாக உள்ளது.
நிலப்பரப்பு சிவகங்கைக் காடுகள் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. இந்
ஊரணி, பொதுப்பாதை, சுடுகாடு இம்மூன்றும் அப்பகுதி மக்க
ளின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ள நிலையில், 1991-ஆம்
ஆண்டு அங்கே வருகிறார் கதாநாயகன் குணசேகரன்.

சில போலிப் பத்திரங்களைப் பதிவு செய்துகொண்டு 'காடு
கள்' என வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும் நிலப்
பரப்பை முதலில் ஆக்கிரமித்து, பின்னர் மெதுவாக, ஊரணி,
டுகாடு, பொதுப்பாதை ஆகியவற்றிலும் குணசேகரன் கை
வைத்தார். ஆரம்பத்தில் கண்டு கொள்ளாத அப்பகுதி மக்கள்,
ன்னர் தட்டிக் கேட்கத் தொடங்கினர். உடனே தனது வழக்க
ான ''கட்டப் பஞ்சாயத்தை'' அப்போதைய சிவகங்கை
வட்ட வலது கம்யூனிஸ்ட் செயலாளர்
். மகாலிங்கம் தலைமையில் நடத்தி,
ன் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த
பந்தத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

அந்த இடத்தைப் பொருத்தவரை குண
ரன் கொண்டு வந்த போலி பத்திரம்
ஒரே ஆவணமாக அப்போது காண்
ப்பட்டு. அரசு சர்வேயர் அல்லாமல்
பர் சர்வேயரைக் கொண்டு இடத்தை
க ஆரம்பித்த குணசேகரன்,
ள்ள 0.24 செண்ட் சுடுகாடு தவிர மீத
ந்தும் தமக்கே என்கிற சதியை நிறை
க் கொண்டார்.

றும் புரியாமல் மிரண்டு போயி
ழ்த்தப்பட்ட மக்களிடம் தேனொழு
். இந்தச் சுடுகாட்டு இடத்தில் சமு
டம் கட்டித் தருகிறேன் என அவர்



கள் வாயில் கூனன் குண்டு ஊரணிக் களிமண்ணையே வைத்து
அடைத்தார், 'தலித் பாதுகாவலன்' குணசேகரன். பொதுப்பாதை
அடைக்கப்பட்டுவிட்டது. கூனன் குண்டு ஊரணியோ புல்டோச
ரால் மண் நிரப்பப்பட்டு பிளாட்டுகளாக மாறி விற்பனையாகி
வருகிறது. வீடுகளும் கட்டப்பட்டு விட்டன. இது நடந்து 14
ஆண்டுகளாகியும் சமுதாயக் கூடம் எழும்பாத சுடுகாட்டு இட
மும் இப்போது கல் ஊன்றி பிளாட்டுகளாக மாறத் தயார் நிலை
யில் உள்ளது. இதுதான் அகிலாண்டபுரம் அழுக்கிய புராணச்
சுருக்கம்.

பல்வேறு நேரங்களில் இதை எதிர்த்துப் பேசிய தாழ்த்தப்
பட்ட மக்கள் மிரட்டப்பட்டுள்ளனர். சிலர் பணத்தால் விலைக்கு
வாங்கப்பட்டனர். இப்போது வி.வி.மு.வின் துண்டறிக்கை
வெளிவந்ததும், அப்பகுதி மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட
அநீதிக்கு நீண்டநாள் கழித்து நீதி கிடைக்கப் போகிறது என்கிற
மகிழ்ச்சியில் வி.வி.மு.வை தொடர்பு கொண்டு வருகின்றனர்.
கம்யூனிஸ்டு என்ற பெயரில் கட்டப் பஞ்சாயத்து நடத்திக்
கொண்டு செங்கொடியையும் சிவப்புத் துண்டையும் இழிவு
படுத்தி வரும் குணசேகரனோ, போலி பத்திரத்தை ஒரிஜின
லாக்க இப்போது இந்து அறநிலையத் துறை அலுவலகத்தைச்
சுற்றி வந்து கொண்டிருக்கிறார்.

வி.வி.மு.வின் செயல்பாடுகளால் உற்சாகமடைந்துள்ள கம்
யூனிச உணர்வுள்ள வலது கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள் சிலர்,
காரைக்குடியில் நடந்த வலதுகளின் மாவட்ட மாநாட்டில், மாநி
லத் தலைவரான நல்லகண்ணுவிடம் மேடையிலேயே பு.ஜ. இத
ழையும் வி.வி.மு. துண்டறிக்கையையும் கொடுத்துள்ளனர்.
அவரும் படித்துப் பார்ப்பதாகக் கூறியுள்ளார். ஆனால், அவர்
படித்து முடித்த பின்னர் குணசேகரன் மாவட்டச் செயலாளராக்
கப்பட்டுள்ளார் என்ற அறிவிப்புதான் வெளியாகியது. எவ்வித
சுயபரிசீலனையுமின்றி, உச்சி முதல் உள்ளங்கால் வரை வலது
கம்யூனிஸ்ட் கட்சி சீரழிந்து கொண்டிருப்பதற்கு இது இன்னு
மொரு நிருபணம்.

•••

**பின் இணைப்பு:**

படமாத்தூர் சக்தி சுகர்ஸ் - கோகோ கோலா பேரம் (பம்பர்
பரிசாக டாடா சுமோ); அரிசிக்கடை சிவசாமிநாடார் அந்தாதி;
காளவாசல் நில அபகரிப்பு புராணம்; குடஞ்சாடி கண்மாய் மர
ஏல மகாத்மியம்; மார நாடு விளத்தூர் கால்வாய் விவகாரம்; தீர்த்
தாம்பேட்டை திருப்புகழ்; வசந்தம் தியேட்
டரை 'பலான' தியேட்டராக்கி மூடிய 'கிளு
கிளு' கதை; கட்சிக்குள்ளேயே தாழ்த்தப்பட்
டோரைக் கட்டம் கட்டிய தொடர்கதை;
அண்ணாமலை நகர் அடாவடி - இப்படி
குணசேகரன் கும்பலின் அட்டூழியங்கள் -
அத்துமீறல்கள் பற்றி அடுக்கடுக்கான ஆதா
ரபூர்வமான தகவல்கள் வி.வி.மு.விடம்
வந்தவண்ணமுள்ளன. இவற்றைத்
தொகுத்து, போலி கம்யூனிச நாட்டாமை
குணசேகரன் கும்பலை அம்பலப்படுத்தும்
பணியில் வி.வி.மு. ஆயத்தமாகி வருகி
றது. குணசேகரன் கும்பலின் 'மகாத்மியங்
கள்' விரைவில் வி.வி.மு. பிரசுரங்களில்
வெளியிடப்படும்.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி



படிப்பகம்

www.padippakam.com

பட்ஜெட்:

# நரியைப் பரியாக்கு 'மார்க்சிஸ்டு'கள்

பா.ஜ.க. கூட்டணி கட்சிகள், அ.தி.மு.க., உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், ப.சிதம்பரத்தின் பட்ஜெட்டைப் பாராட்டாதவர்களே இல்லை என்று சொல்லிவிடலாம். பொருளாதார நிபுணர்கள் இந்த பட்ஜெட்டுக்கு 10-க்கு 8 மதிப்பெண் கொடுக்கலாம் என்கிறார்கள். "1997-க்குப் பின்வந்துள்ள, நல்லதொரு எதார்த்தமான பட்ஜெட் இது" எனத் தரகு முதலாளிகள் வருணிக்கிறார்கள். இவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு, வலது, இடது கம்யூனிஸ்டு கட்சிகளும் பட்ஜெட்டைப் புகழ்ந்து தள்ளியுள்ளன.

"இதற்கு முன் எந்தவொரு பட்ஜெட்டும், இதனைப் போல கிராமப்புற வளர்ச்சிக்கான திசை வழியைச் சுட்டிக் காட்டியதில்லை" எனப் பாராட்டி இருக்கிறது வலது கம்யூனிஸ்டு கட்சி.

'மார்க்சிஸ்டு' கட்சியின் அரசியல் தலைமைக் குழு (பொலிட் பீரோ) "இந்த பட்ஜெட்டில் வரவேற்கத்தக்க நல்ல மாற்றங்கள் இருப்பதாக" அறிக்கை வெளியிட்டுள்ளது. "நாங்கள் கேட்ட அளவிற்கு சமூக நலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவில்லை என்பதைத் தவிர, வேறெந்தக் குறையும் பட்ஜெட்டில் இல்லை" எனக் குறிப்பிட்டுள்ளது, அக்கட்சி.

கல்வி, சுகாதாரம், விவசாயம், கிராமப்புற வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு கடந்த ஆண்டு பட்ஜெட்டை விட, இந்த ஆண்டு பட்ஜெட்டில் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதைக் காட்டித்தான், இதனைக் கிராமப்புற ஏழை மக்களுக்கான பட்ஜெட் எனப் பலரும் புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

ஆனால், இந்தக் கூடுதல் நிதி ஒதுக்கீடு பொருளாதாரப் புள்ளி விவர மோசடி!

## நலத்திட்டங்களில் தில்லுமுல்லு

"மார்க்சிஸ்டு" களின் வேத நூலாகி விட்ட குறைந்தபட்ச பொது வேலை திட்டத்தில், "ஒவ்வொரு கிராமப்புற, நகர்ப்புற ஏழை மற்றும் கீழ்நிலை நடுத்தரக் குடும்பத்திலும், உடற்தகுதியுள்ள ஒருவருக்குக் குறைந்தபட்சக் கூலி கிடைக்கும் வகையில், ஆண்டுக்கு நூறு நாட்களுக்காவது சட்டபூர்வ வேலை உத்திரவாதம் கிடைக்கும்" எனக் கூறப்பட்டுள்ளது.

தற்பொழுது இந்தத் திட்டத்தில் இருந்து நகர்ப்புறத்தை ஒதுக்கிவிட்டு இதனை, "தேசிய கிராமப்புற வேலை உத்திரவாதத் திட்டம்" என வெட்டிக் குறுக்கி விட்டார், ப.சிதம்பரம். இந்தத் திட்டத்திற்கு 5,400 கோடி ரூபாய், 50 இலட்சம் டன் உணவு தானியம் - இரண்டுமாகச் சேர்த்து 11,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும், இந்த ஒதுக்கீடு, கடந்த ஆண்டை ஒப்பொழுது 275 சதவீதம் அதிகம் எல் பீற்றிக் கொள்கிறார்கள்.

இந்த 11,000 கோடி ரூபாய் ஒது கீட்டை காகிதத்தில் பார்த்து நக்கிக் கொள்ள வேண்டியதுதான். ஏனென்றால், இந்தத் திட்டத்திற்கான பணத்தை இனிமேல்தான் கண்டு பிடிக்க வேண்டும் என ப.சிதம்பரம் பட்ஜெட் உரையிலேயே பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். இவர் பணத்தைக் கண்டுபிடிக்கும் வரையில், கிராமப்புற ஏழைகள் அடி வயிற்றில் ஈரத் துணியைக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

இது ஒருபுறமிருக்க, இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் அரிசி / கோதுமையின் விலை கிலோ ஒன்றுக்கு 11.00 ரூபாய் என பட்ஜெட்டில் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இந்தப் புழுத்துப் போன அரிசியை யாரும் ரூ. 5.50க்கு மேல் வாங்க மாட்டார்கள். இதன்படி பார்த்தால், இத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் உணவு தானியத்தின் மதிப்பு 2,750 கோடி ரூபாய்தான். இதோடு, ப.சிதம்பரம் கண்டுபிடிக்கப் போகும் 5,400 கோடி ரூபாயையும் சேர்த்துக் கொண்டால், தேசிய கிராமப்புற வேலை உத்திரவாத் திட்டத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு 8,200 கோடி ரூபாய்தான்!

கிராமப்புற ஏழைக ளின் வேலை வாய்ப்புக் காக, வேலைக்கு உண திட்டம், சம்பூர்ண கிரா வேலை வாய்ப்பு திட்ட என்ற இரு திட்டங்கள ஏற்கெனவே மைய அ நடைமுறைப்படுத்தி வ கிறது. தேசிய கிராமப் வேலை வாய்ப்பு உத் வாதத் திட்டத்துக்கு அ நிதி ஒதுக்கியிருப்பத காட்ட வேண்டும் எ



"வாட்" வரி அமலாக்கப்படுவதை எதிர்த்து, அனைத்திந்திய வர்த்தக சங்கத்தினரால் எரிக்கப்படும் சிதம்பரத்தின் பட்ஜெட் உரை நகல்.



படிப்பகம்

www.padippakam.com

வ, சம்பூர்ண கிராம வேலை திட்டத்திற்கு கடந்த ஆண்டை த ஆண்டு 1,600 கோடி ரூபாய் ாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமப்புற வேலை உத்திர திட்டம் செயல்படும் மாவட்டங் , வேலைக்கு உணவு திட்டம் படியாக நிறுத்தப்படும் என்றும் ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. படி பல தில்லுமுல்லுகள் செய்து ா கிராமப்புற வேலை வாய்ப்புக்கு 5 சதவீதம் கூடுதலாக நிதி ஒதுக்கப் டுள்ளதாக ப.சிதம்பரம் கும்பல் ம் காட்டுகிறது.

கிராமப்புற ஏழைகளின் வேலை வாய்ப்புக்காக நடைமுறைப்படுத்தப் படும் பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்த திட்டக் கமிசன், ஒரு கிராம பஞ் சாயத்தில், ஒரு குடும்பத்துக்குத்தான் நூறு நாட்களுக்கு வேலை கிடைப் பதாக ஒப்புக் கொண்டுள்ளது. கிராமப் புறத்தைச் சேர்ந்த ஏழை மக்களுக்கு குறைந்தபட்சம் 100 நாட்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றால் கூட அதற்கு 40,000 கோடி ரூபாய் முதல் 50,000 கோடி ரூபாய் தேவைப் படும். ஆனால், ப.சிதம்பரமோ, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டத்திற்கு வெறும் ,400 கோடி ரூபாயை ஒதுக்குவதாகக் ாகிதத்தில் குறிப்பிட்டு விட்டு, கிரா ப்புற வேலைவாய்ப்பில் ஏதோ புரட் மயச் செய்துவிட்டது போல மாய்மா செய்கிறார்.

கிராமப்பற வளர்ச்சிக்கு கடந்த ாடைவிடக் கூடுதலாக 2,905 ரூபாய் (நிதி ஒதுக்கீடு 11,494 ரூபாய்) நிதி ஒதுக்கப்பட்டிருப் ப.சிதம்பரம் கூறுகிறார். பா.ஜ.க. னி ஆட்சியில் கிராமப்புற ிக்கு 2002-03-ஆம் ஆண்டில் கோடி ரூபாயும்; -ஆம் ஆண்டில் 11,369 பாயும் நிதி ஒதுக்கப்பட்டது. ந்த ஆண்டு, ஐக்கிய முற் கூட்டணி ஆட்சியில் 8,589 பாயாகக் குறைக்கப்பட்டது. ஆட்சியில் குறைக்கப்பட் டும் பழைய அளவிற்குக் டுத்துவிட்டு, ஏழைப் பங் ால வேடம் போட்டுக் டார், ப.சிதம்பரம்.

ர்மாண்'' என்ற திட்டத் டையில், கிராமப்புற க்கு 2009-க்குள் 60 ள் கட்டிக் கொடுக்கப் ஜெட்டில் அறிவிக்கப் ற்கெனவே ஏனோ நடைமுறைப்படுத்தப்

**தரகு முதலாளிகள் கிராமப்புறச் சந்தையை வளைக்க வேண்டும் என்றால், கிராமங்களில் ஓரளவு பணப்புழக்கம் இருக்க வேண்டும். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமே, இந்தப் பணப் புழக்கத்தை ஏற்படுத்துவதுதான்.**

பட்டு வரும் இந்திரா ஆவாஸ் யோஜ்னா என்ற திட்டம்தான் பாரத் நிர் மாண் எனப் புதிய அவதாரம் எடுத் துள்ளது. ''மைய அரசு ஏறத்தாழ 100 நலத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வந்ததாகவும் அவற்றுள் 30 திட் டங்களைத் தூக்கிப் போட்டுவிட்டு, சில திட்டங்களை இணைத்தும்; சில திட்டங்களுக்குப் புதுப் பெயர் கொடுத் தும் பட்ஜெட்டில் அறிவித்திருப் பதாக'' மைய அரசின் அதிகாரி ஒருவர் ஒப்புதல் வாக்குமூலமே கொடுத்திருக் கிறார்.

**''கிராமப்புற வளர்ச்சி'' என்ற முகமூடி**

சி.பி.எம். உள்ளிட்டு, இந்த பட் ஜெட்டைப் பாராட்டுபவர்கள் அனை வருமே, இது கிராமப்புற வளர்ச்சிக்கு உதவும் பட்ஜெட் என்கிறார்கள். இவர் களைப் பொருத்தவரை, கிராமங்களில் தார்ச் சாலை போட்டு நகரத்தோடு இணைப்பது; கிராமங்களில் தொலை பேசி - கணினி வசதி ஏற்படுத்திக் கொடுப்பதுதான் கிராமப்புற வளர்ச்சி.

இந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டால், நசிவடைந்து கொண்டே போகும் விவசாயம் எழுந்து நின்றுவிடுமா? கடன் சுமை தாளாமல் ஏழை - நடுத்தர விவசாயி கள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போவதைத் தடுத்து விடுமா? அரிசிக்கும், கோதுமைக்கும், கரும்புக் கும், எண்ணெய் வித்துக்களுக்கும் கட் டுப்படியாகக் கூடிய விலை கிடைத்து விடுமா! இந்தப் பிரச்சினைகளில் ஒன் றைக் கூடத் தீர்க்க சிதம்பரத்தின் பட் ஜெட் முன்வரவில்லை; மாறாக, கிரா மப்புற பொருளாதாரத்தையும், தாராள மயத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கத் தான் முனைப்பு காட்டுகிறது.

நமது நாட்டில் 1980-இல் ஒரு நப ருக்கு 178 கிலோ என்றிருந்த உணவு தானிய உற்பத்தி, இன்று 155 கிலோ வாகச் சரிந்துவிட்டது. நிலைமை இப்ப டியே போனால் 2015-இல், இந்தியா உணவு தானியங்களை அந்நிய நாடு களில் இருந்து இறக்குமதி செய்ய நேரி டும் என எச்சரிக்கிறார்கள், விவசாய வல்லுநர்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் உணவு தானிய உற்பத்தியை அதிகரிப் பது பற்றி பட்ஜெட் பேசவில்லை. மாறாக, மாற்றுப் பயிர் திட்டங்களுக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறார், ப.சிதம்பரம். சென்னை, மும்பய் போன்ற ஏழு நகரங்களின் அழகுக்காக 5,000 கோடி ரூபாயை ஒதுக்கியிருக் கும் ப.சிதம்பரம், விவசாய வளர்ச் சிக்கு வெறும் 6,425 கோடி ரூபாயை வாய்க்கரிசியாகப் போட்டிருக்கிறார். இந்த ஒதுக்கீட்டில் 10-ல் ஒரு பங்கு - 630 கோடி ரூபாய் ஏற்றுமதி சார்ந்த தோட்டப் பயிர் வளர்ச்சிக்கு கொட்டப் பட்டுள்ளது.

விவசாயக் கடனுக்காக 1,08,500 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கப் பட்டுள்ளது. விவசாயக் கடன் பெறும் விவசாயிகளின் எண்ணிக்கையை 1 கோடியாக உயர்த்த வேண்டும் என உத் திரவு போட்டிருக்கிறார், ப.சிதம்பரம். அரசாங்கக் கணக்குப்படி 1 கோடி விவ சாயிகளைத் தவிர, மீதி உழவர்களெல் லாம் கந்துவட்டிக்காரனிடம்தான் கையேந்த வேண்டும். பிறகு ஏன், விவ சாயிகளின் தற்கொலைச் சாவுகள் நடக் காது? இது ஒருபுறமிருக்க, இந்த ஒரு கோடி விவசாயிகள் யார் என்றால், ஒப் பந்த விவசாயத்தில் நுழைந்துள்ள பெப்சி, கெல்லாக் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் கூட, விவசாயிகள்தான் எனத் தாராளமயத்தைப் புகுத்தி விட் டார், ப.சிதம்பரம்.

ஒரு கோடி ஏக்கரைப் புதிதாக விளைநிலமாக்கப் போவதாக பட் ஜெட்டில் சொல்லியிருக்கிறார், ப.சிதம் பரம். ஒரு கோடி ஏக்கர் நிலம் எங்கேயி ருந்து வரும்? பண்ணையாளர்களிடமி ருந்து பிடுங்கப் போகிறதா காங்கிரசு அரசு? அரசாங்கப் புறம்போக்கு நிலங் களை அம்பானி போன்ற 'விவசாயி' களிடம் குத்தகைக்கு விடும் சதித் திட்ட மாகத்தான் இது இருக்க முடியும். சிதம் பரத்தின் இந்த அறிவிப்பைக் கேட்டவு டனே நிலமில்லாத விவசாயிகள் குதூக லிக்கவில்லை. உரக்கம்பெனி முதலா ளிகள்தான் மகிழ்ச்சியடைந்தார்கள். விவசாயிகள், பொருட்

விலையைத் தருமாறுதான் அர சாங்கத்திடம் கேட்கிறார்கள். ஆனால், சிதம்பரமோ, சந்தை விலை விப ரத்தை விவசாயிகள் தெரிந்து கொள்ள கிராமப்புற தகவல் மையம் என்ற திட் டத்தை உருவாக்கி, அதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார். ஊருக்கு வழி கேட்டால், இவர்கள் சுடுகாட்டுக்கு வழிகாட்டுகிறார்கள். ஏற்கெனவே, கிராமப்புறச் சந்தையை இணைய தள வலைப் பின்னல் மூலம் விழுங்கிக் கொண்டிருக்கும் ஐ.டி.சி., இந்துஸ்தான் லீவர் போன்ற தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்குத்தான் இந்தத் திட் டம் பயன்படும்.

**நாலுகால் பாய்ச்சலில் தாராளமயம்**

விவசாய விளைபொருட்களின் இறக்குமதி மீது அதிக சுங் கவரி விதிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையைக் கண்டு கொள்ளாத ப.சிதம்பரம், சுங்கவரித் தீர்வையைத் தென்கிழக்காசிய நாடுக ளின் அளவிற்குக் குறைப் பதுதான் எனது குறிக் கோள் என பட்ஜெட்டை உரையிலேயே அறிவித் துவிட்டார். இதனின் தொடக்கமாக, 217 வித மாக மின்னணு சாதனங் கள் - நுகர் பொருட்களின் இறக்குமதிக்கு எந்தவித மான சுங்கவரியும் கிடை யாது எனத் தாராள சலுகை வழங்கப்பட் டுள்ளது.

சிறு தொழில் தயாரிப் புக்கென ஒதுக்கப்பட்ட 108 பொருட்களை அப் பட்டியலில் இருந்து நீக்கி, இனி தரகு முதலா ளிகளும் அந்த 108 தொழில்களில் நுழைய லாம் எனச் சலுகை காட்டி யதன் மூலம், சிறு தொழில்களின் அழி வைத் துரிதப்படுத்தியிருக்கிறார், ப.சி தம்பரம்.

உலக வங்கி உத்தரவுப்படி ரேசன் அட்டை வழங்குவதை வறுமை கோட் டுக்கு மேலே / கீழே எனப் பிரித்ததைப் போல, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலும், வறுமை கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்ப நபர்க ளுக்குத்தான் வேலை வழங்கப்படும்; இத்திட்டத்தின் கீழ் பெண்களுக்கு ...ப்படமாட்டாது; அர ...சட்ட

கூலி வழங்குவதற்கு எந்த உத்திரவாத மும் கிடையாது எனப் புதிய விதி களைப் புகுத்தி, அந்தக் கவர்ச்சிவாதத் திட்டத்தையே செல்லாக் காசாக்கி விட்டார்.

பட்ஜெட்டுக்கு முன்பாகவே, இந் திய வங்கிகளில் 74 சதவீதம் வரை அந்நிய மூலதனம் நுழைய அனுமதிய ளித்திருந்த ப.சிதம்பரம், பட்ஜெட்டில், அந்நிய வங்கிக் கிளைகள் திறப்பதற்கு இருந்து வந்த கட்டுப்பாடுகளை அறவே நீக்கிவிட்டார்; மேலும், அந்நிய வங்கிகள், தங்களின் துணை நிறுவனங்களைத் திறந்து கொள்ளவும் அனுமதி அளித்திருக்கிறார்.

ரிசர்வ் வங்கியை அரசின் கட்டுப் பாட்டில் இருந்து விடுவிக்கவும்; பொதுத்துறை வங்கிகள் வைத்திருக்க வேண்டிய அன்றாட பணக் கையிருப் புக்கு இருந்து வரும் கட்டுப்பாடுகளை நீக்கவும் மைய அரசு பட்ஜெட்டில் ஒப்புக் கொண்டுள்ளது. ரிசர்வ் வங்கி யின் இந்த சுதந்திர செயல்பாடு என் பது, ஐ.எம்.எஃப்., உலக வங்கியின் நிபந்தனைகளை நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கூட இன்றி, நடைமுறைப் படுத்தும் சுதந்திரம் ஆகும். மேலும் சுரங்கத் தொழிலிலும், சில்லறை வர்த்த கத்திலும் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு அனுமதியளிக்கப்



பட்ஜெட்டுக்கு முன்பாக, "நாங்கள் குரைப்பதோடு கடிக்கவும் செய்வோம்" எனச் சவால்விட்ட 'மார்க்சிஸ்டு' கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி (வலது), இப்பொழுது ப.சிதம்பரம் வீசிய எலும்புத் துண்டைத்தான் கடிக்கிறாரா?

போவதாகவும் டுள்ளது.

**கறிச் சோறும், எலு**

ஏழை விவசாயி கடனுக்கான வட்டி செய்ய மறுத்துவிட்ட மேட்டுக்குடி கும்பலுக்கு ளுக்கும் வரிச் சலுகைக தில் மட்டும் எவ்விதத் தய டவில்லை. தனிநபர்களின் திற்கு மட்டுமின்றி, உள்நா முதலாளித்துவ நிறுவனங்க மானத்திற்கும் தாராள சலு வழங்கப்பட்டுள்ளன. இந்த வரி கைகளின் காரணமாக, மொத்த நாட்டு உற்பத்திக்கும், வரி வருவா கும் இடையேயான விகிதம் 10.53 வீதமாக விழுந்து விட டது. அதேசமயம், நமது நாட்டின் மீது தனியார்ம யத்தைத் திணித்துவரும் ஏகாதிபத்திய நாடுகளில், இந்த விகிதம் 37 சதவீத மாகும். அரசனை மிஞ் சிய விசுவாசியாக இருக் கிறது காங்கிரசு கும்பல்.

பட்ஜெட்டில் அறி விக்கப்பட்டுள்ள வரிச் சலுகையின் காரணமாக, தரகு முதலாளி டாடா விற்கு, அவருடைய உருக்கு ஆலையில் இருந்து மட்டும் 131 கோடி ரூபாய் கூடுதல் இலாபமாகக் கிடைக்கும். இந்த பட்ஜெட்டுக்குப் பின், குமார மங்கலம் பிர்லா என்ற தரகு முதலா ளியின் சொத்து மதிப்பு 57.88 கோடி ரூபாயும்; "இன்போசிஸ்" நிறுவன அதிபர் நாராயண மூர்த்தி யின் சொத்து மதிப்பு 90 கோடி ரூபாயும் "விப்ரோ" நிறுவன அ பர் அசிம் பிரேம்ஜியின் சொத் மதிப்பு 1,443 கோடி ரூபாயும் அதி ரிக்கும் என "டைம்ஸ் ஆப் இந்திய நாளிதழ் கணக்குப் போட்டுக் கா நம்மை மலைக்க வைக்கிறது.

வரிச் சலுகைகளுக்காக மின்றி, விவசாயம் உள்ளிட்ட நலத் திட்டங்களுக்கு கூடுதல் நிதி கியதற்காகவும் சிதம்பரத்தின் ப டைத் தரகு முதலாளிகள் பார றார்கள். எலி அம்மணமாக தென்றால், அதற்குக் காரணம் மல் இருக்காது.

தற்காக வாய்ப்பு விட இர் குறைவ தேசிய வாதத் களில் படிப் பட்ட இப் தால் 275 பட ப

ஏப்ர

புறச் சந்தை ஏற்கெனவே
ந அடைந்துவிட்டது. எவ்
ன் இலவசங்கள், விற்பனைச்
ளை வாரி வழங்கினாலும் இந்
க்கத்தை உடைக்க முடிய
. இதனால், தரகு முதலாளிக
ன்னாட்டு நிறுவனங்களும் கிரா
ள நோக்கிப் படையெடுக்கத்
ங்கி விட்டன.

தற்கு ஏற்ப அவர்களின் வியாபா
ந்திரங்களும் மாறியுள்ளன. கிரா
புற மக்களுக்காகவே கிளினிக்
ஸ் ஷாம்பு 50 பைசா பாக்கெட்டுக
ம் விற்கப்படுகிறது. சிகரெட் மட்
டுமே தயாரித்து வந்த ஐ.டி.சி. கம்
பனி, இன்று நோட்டு புத்தகங்கள்,
சமையலுக்குத் தேவையான மசாலா
பொருட்கள் தயாரிப்பிலும் இறங்கி
விட்டது. சிறு தொழில்களுக்குக்
கொடுக்கப்பட்ட பாதுகாப்பை விலக்
கிக் கொண்டு, அவற்றை அழிப்பதன்
மூலம், கிராமப்புற மக்கள்கூடத் தங்க
ளின் தேவைக்கு பன்னாட்டு நிறுவனங்
கள் தயாரிக்கும் பொருட்களைத்தான்
வாங்க வேண்டும் என்ற நிலைமை திட்
டமிட்டு உருவாக்கப்படுகிறது.

தரகு முதலாளிகளும், பன்னாட்டு
நிறுவனங்களும் கிராமப்புறச் சந்
தையை வளைக்க வேண்டும் என்றால்,
கிராமங்களில் ஓரளவு பணப்புழக்கம்
இருக்க வேண்டும். பட்ஜெட்டில் அறி
விக்கப்பட்டுள்ள ''பாரத் நிர்மாண்''
என்ற கிராமப்புற வளர்ச்சித் திட்டத்
தின் நோக்கமே, இந்தப் பணப் புழக்
கத்தை ஏற்படுத்துவதுதான். சி.ஐ.ஐ.
என்ற தரகு முதலாளிகளின் சங்கம்
பாரத் நிர்மாண் திட்டத்தை ஆதரித்துக்
கொடுத்துள்ள அறிக்கையைப் படித்
துப் பாருங்கள். கிராமப்புற வளர்ச்சித்
திட்டங்களால் பலன் அடையப்
போவது ஏழை விவசாயிகளா? நுகர்
பொருட்கள், மோட்டார் பம்ப்புகள்,
சிமெண்ட் தயாரிக்கும் முதலாளிகளா
என்ற உண்மை புரிந்து விடும்.

சிதம்பரம், இந்த பட்ஜெட்டின்
தரகு முதலாளிகளுக்கு கறி
து படைத்திருக்கிறார். அதில்
சம் எலும்புத் துண்டை எடுத்து
புற வளர்ச்சி என்ற பெயரில்
டார். மனித முகத்துடன் கூடிய
யம் எனப் பசப்புகிறார்களே,
உண்மையான முகம் இது
ந்த எலும்புத் துண்டைக் கவ்
ண்டு, ப.சிதம்பரத்திற்கு விசு
வாலாட்டுகிறார்கள், 'மார்க்
ர்!

• செல்வம்

## நகர்ப்புற 'ஆக்கிரமிப்பு' இடிப்பு:

# ஏழைகள் மீதான போர்! நீதிமன்ற அக்கிரமம்!

**வாய்** பேசாத ஊமைப்பிள்ளை திருவாய் மலர்ந்து, ''எப்பம்மா தாலிய றுப்பே?'' என்று தன் தாயிடம் கேட்ட தாம். தென் மாவட்ட வழக்குரைஞர்கள் போராடிப் 'பெற்ற' சனியனான மதுரை உயர்நீதி மன்றம், தனது முதல் சாதனையாக மக்களின் கூரைக்குக் கொள்ளி வைத்துவிட்டது.

மதுரை - கிருஷ்ணராயர் தெப்பக் குளம் கிழக்கு - தெற்கு தெருக்களிலுள்ள கடை வியாபாரிகள், அதே தெருவில் வணிகம் செய்யும் தரைக் கடை வியாபாரிகளை அப்புறப்படுத்தக் கோரி மாநகராட்சிக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில், தரைக்கடைகளை அகற்றுமாறு உத்தரவிட்டதுடன் மதுரை நகரெங்குமுள்ள 'ஆக்கிரமிப்புகளை' அகற்றுமாறும் மாநகராட்சிக்கு உத்திரவிட்டது மதுரை உயர்நீதி மன்றம்.

மதுரை நகரெங்கும் உருண்டன புல்டோசர் சக்கரங்கள். தங்களது அதிகாரத்தின் வலிமையைக் கண்டு மனக்கிளர்ச்சியடைந்த நீதிபதிகள், ''சபாஷ்.... சட்டத்தின் சக்கரங்கள் தென்மாவட்டங்கள் முழுவதும் உருளட்டும்'' என்று இன்னொரு உத்தரவும் பிறப்பித்தனர்.

**சிவகாசி** - தங்களுக்கெதிராக இப்படியொரு 'மரண தண்டனை' உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது சிவகாசி வெம்பக்கோட்டை தெருவைச் சேர்ந்த ஐநூறு தொழிலாளர் குடும்பங்களுக்குத் தெரியாது. சிவகாசியின் புகழ் பெற்ற பட்டாசுத் தொழிற்சாலைகளிலும் அச்சகங்களிலும் பணியாற்றும் அந்தத் தொழிலாளர்கள், மார்ச் 10-ஆம் தேதியன்று காலையில் வேலைக்குக் கிளம்பும்போது நகராட்சி அதிகாரி ஒருவர் அந்தத் தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப் போவதாக வாய்வழித் தகவல் தந்திருக்கிறார். 'தங்களது தெருவே ஆக்கிரமிப்பாகக் கருதி அகற்றப்படும்' என்று அந்த மக்கள் நினைத்தும் பார்க்கவில்லை.

மதியம் சுமார் ஒரு மணிக்கு அந்தத் தெருவின் மின் இணைப்புகள் அனைத்தும் திடீரெனத் துண்டிக்கப்பட்டபோது தான் ஆபத்து நெருங்குகிறது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அதற்குள் வீடுகளின் மீது புல்டோசர் ஏறத் தொடங்கி விட்டது. சில மணி நேரங்களில் எல்லாம் முடிந்து விட்டது.

கணவனும் மனைவியுமாக அன்றாடம் பன்னிரெண்டு மணி நேரம் உழைத்து, சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய கல் வீடுகள் அவர்கள் கண் முன்னே கற்குவியல்களாயின. கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக அவர்கள் செலுத்தி வரும் சொத்துவரி, குழாய் வரி, மின் கட்டண ரசீதுகளும் ரேசன் கார்டுகளும் வாக்காளர் அடையாள அட்டைகளும் அவர்கள் தரப்பு நியாயத்தை நிரூபிக்கின்றன.

ஆனால், இந்த நிருபணங்கள் எவையும் இடித்த வீடுகளை உயிர்ப்பிக்கப் போவதில்லை. பேச்சுரிமை மட்டுமே அவர்களிடம் எஞ்சியிருக்கும் ஜனநாயக உரிமை என்பதால் அந்த உரிமையின் கீழ் அவர்கள் கதறினார்கள்; ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களுக்கு சாபம் இட்டார்கள். இதனை எதிர்பார்த்து நகராட்சித் தலைவர் உள்ளிட்ட கட்சிப் பிரமுகர்கள், சொல்லி வைத்தாற்போல தலைமறைவாகி விட்டார்கள்.

சட்டத்தின் சக்கரங்கள் சுழல்கின்றன. முன்னறிவிப்பு கொடுத்துவிட்டுத்தான் இடிக்க வேண்டுமென நீதிபதிகள் ஆணையிட்டிருப்பதால் தென் மாவட்டங்கள் முழுவதும் ஒலிபெருக்கிகளும் தண்டோராக்களும் முழங்குகின்றன. தனது குடிமக்களுக்கு உயிர்வாழும் உரிமையை நேர்மறையில் உத்தரவாதம் செய்யவியலாத அரசானது, அவர்களுடைய உயிர்வாழும் உரிமையைப் பறிக்கும்போது 'சட்டப்படி' நடந்துகொள்ள வேண்டும் என நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. எனவேதான் தண்டோராக்கள்!

தங்கள் மீது ஏவிவிடப்பட்டிருக்கும் இந்த வன்முறைக்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு மதுரை உயர்நீதி மன்றத்தில் அலைமோதுகிறார்கள் தென் மாவட்ட மக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நகர்ப்ப
தேக்கத்தை
வளவுதா
சலுகைக
த் தே
வில்லை
ளும், ப
மங்கள
தொட



மும்பை ஜூஹு கடற்கரை: இந்தி நடிகை மாதுரி தீட்சித்தின் மாளிகை அழகுக்காக இடிக்கப்பட்ட மீனவர்களின் வீடுகள்.

சிவகாசியைத் தொடர்ந்து கொடைக்கானல் நகராட்சி 10,000 உழைக்கும் மக்களுடைய வீடுகளை - அதாவது 'ஆக்கிரமிப்பு'களை - அகற்றும் பணியைத் தொடங்கியது. அதற்கு இடைக்காலத் தடை பெற்றிருக்கிறார் மதுரை வழக்குரைஞர் லஜபதிராய். ஆனால் மற்ற பல நகரங்களிலிருந்து தாக்கல் செய்யப்படும் மனுக்கள் நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்படு கின்றன. தென் மாவட்டங்களின் எல்லா நகரங்களிலும் சட்டத்தின் புல் டோசர் சக்கரங்கள் ஏழைகளின் குடிசை களை மிதித்து நசுக்குவதற்கு அரசின் ஆணையை எதிர்பார்த்துக் காத்து நிற் கின்றன.

மும்பை - டிசம்பர் 8-ஆம் தேதி தொடங்கிய குடிசை இடிப்பில் தகர்க் கப்பட்ட வீடுகள் 91,000. ஆனந்த் நகர் என்ற சேரிப்பகுதியில் புல்டோசர்கள் நுழைந்தபோது 'இடிக்காதே இடிக் காதே' என்று கதறியபடியே தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றிப் பற்ற வைத்துக் கொண்டார் ராஜேந்திர சிரேஷ்ட் எனும் தொழிலாளி. 20 நிமி டங்கள் அவர் உடல் எரிந்து துடித்து அடங்கும் வரை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றது போலீசு. புல்டோசர் கள் வேடிக்கை பார்க்கவில்லை. அவை இயங்கின.

காட்கோபர் பகுதியில் குடிசை இடிப்பு தொடங்கிய நேரத்தில் பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந் தாள் ஒரு பெண். பிரசவம் முடியும் வரை கூட புல்டோசர் காத்திருக்க வில்லை. திறந்தவெளியில், மறைப் புக்கு மக்களே சுற்றி நிற்க அவள் பிரச வித்தாள். புல்டோசர் அவளுடைய வீட்டை நசுக்கிக் கொன்றது.

பகுதி மக்கள் மீண்டும் குடிசை போட்டுவிடாமல் தடுப்பதற்காக கூரை, மூங்கில், கதவு அனைத்தையும் நெருப்பு வைத்துக் கொளுத்தியிருக் கின்றனர் மாநகராட்சி ஊழியர்கள்.

3 லட்சம் மும்பை மக்கள் கடந்த 3 மாதங்களாக வெட்டவெளியில் தவிக் கிறார்கள். கழிவறை தேடி, தண்ணீரைத் தேடித் தெருத்தெருவாக அலைகிறார் கள் பெண்கள். வெயிலும் கடும் குளி ரும் பல குழந்தைகளைக் காவு வாங்கி விட்டன.

ர∴பீக் நகர் என்ற இடிக்கப்பட்ட குடிசைப் பகுதியின் மக்கள் அந்த இடி பாடுகளின் மீதே படுத்துறங்குகிறார் கள். "இது கல்லறைக்காக ஒதுக்கப் பட்ட இடம்" என்று அறிவிக்கிறது அங்கே மாநகராட்சி நட்டு வைத்திருக் கும் அறிவிப்புப் பலகை

இவை மும்பை குடிசை இடிப்பின் சில காட்சிகள் மட்டுமே. மராத்திய காங்கிரசு அரசும், சிவசேனாவின் மும்பை நகராட்சியும் இணைந்து நடத் தியிருக்கும் இந்தத் தாக்குதலை, பாக் தாத் மீது அமெரிக்க இராணுவம் நடத் திய தாக்குதலுக்குக் கீழான எதனுட னும் ஒப்பிட முடியாது.

ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து 305 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றியிருப் பதாக அறிவித்திருக்கிறார் மராத்திய முதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக்.

மகாராஷ்டிராவில் இன்னமும் அம லில் இருக்கும் நகர்ப்புற நில உச்சவரம் புச் சட்டத்தின் கீழ் அரசு கையகப்ப டுத்த வேண்டிக் காத்திருக்கும் காலி மனைகளின் பரப்பு 30,000 ஏக்கர். 1971 முதல் அரசு கையகப்படுத்தி யுள்ள காலிமனைகளோ வெறும் 165 ஏக்கர்.

இன்று சதுர அடி 250 ரூபாய் வாடகை நிலவுகின்ற நகரின் மைய மான பகுதிகளில் இருக்கும் அரசு நிலம், பெரும் தரகு முதலாளிகளுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. குத்த கைத் தொகை சதுர அடி 2 ரூபாய். இத னால் மட்டும் ஆண்டுதோறும் அரசு இழக்கும் தொகை 3000 கோடி. இயை யன்றி மூடிக் கிடக்கும் ஜவுளி ஆலைக ளில் முடங்கியிருக்கும் அரசு நிலம் 600 ஏக்கர். 58 தனியார் ஜவுளி மில்கள் அரசு நிலத்தில்தான் அமைக்கப்பட் ருக்கின்றன.

மத்திய மும்பையில் உள்ள 33 மி களில் 29 மூடப்பட்டு விட்டன. தொ லாளிகளின் ஊதிய பாக்கியைக் கூ தராத அந்த மில் முதலாளிகள், ஆ நடத்துவதற்காக அரசிடம் குத்தகை வாங்கிய நிலத்தில் ஏழு நட்சத்திர திகளையும் "ஷாப்பிங் மால்"க யும் கட்டி வாடகைக்கு விட்டிருக்

www.padippakam.com

ங் மில்லின் 6000
ாளிகள் தங்கள்
பாக்கிக்காக
ிலிருந்து இன்னும்
டி வருகிறார்கள்.
மில் நின்று கொண்டி
ம் அரசு நிலத்திற்கு
வாடகையோ வெறும்
56 ரூபாய்!

'சட்ட விரோதமா
வை' என்று மராட்டிய
ரசால் அறிவிக்கப்பட்
ள்ள மும்பை குடிசைப்
குதிகள் பல ஆயிரம்.
ஆனால் 'சட்டவிரோத
மான கட்டிடங்கள்' என்று
பட்டியலிடப்பட்டிருப்ப
வையோ வெறும் 125
தான். ''மும்பையின் பாந்த்ரா பகுதியில் மட்டும் 500 சட்டவிரோதக் கட்டிடங்களை உள்துறை அமைச்சருக்கு நான் காட்டுகிறேன். நீதிமன்றத் தடையாணை நீக்கப்பட்ட பிறகும் மாநகராட்சி இடிக்க மறுக்கும் பல கட்டிடங்களையும் நான் காட்டுகிறேன்'' என்கிறார் சட்டவிரோத கட்டிடங்களுக்கு எதிராகப் போராடிவரும் எட்வின் பிரிட்டோ. இந்தக் கணக்கின்படி மாநகரம் முழுவதும் குறைந்த பட்சம் 50,000 கட்டிடங்கள் சட்ட விரோதமானவையாக இருக்கக் கூடும்.

மேற்கூறியவையனைத்தும் பொது இடங்களை உண்மையிலேயே ஆக்கிரமித்திருப்பவர்கள் யார் என்பதை நிறுவுவதற்கான சில புள்ளி விவரங்கள்.

மும்பையின் தற்போதைய மக்கள்
தொகை 130 லட்சம். இதில் 65% பேர்,
அதாவது சுமார் 85 லட்சம் பேர் சேரிக
ில் வசிப்பதாகவும் சேரிகளின் மொத்
் பரப்பளவு மும்பை நகரின் 6 சதவீத
லம் என்றும் கூறுகிறது மராத்திய அர
ன் அறிக்கை. மும்பையின் 73% மக்
் ஒரு அறை மட்டுமே கொண்ட வீட்
ிலும், 18% பேர் ஒரு சமையலறையும்
் அறையும் உள்ள வீட்டிலும் வசிப்
ாகவும் அரசுப் புள்ளி விவரம் கூறுகி
. அதாவது இரண்டு அறைகளுக்கு
ல் கொண்ட வீடுகளில் வசிப்போர்
றும் 9 சதவீதத்தினர்தான்! இதில்
அறைகள் கொண்ட நடுத்தர வர்க்
டியிருப்புகளும் அடக்கம்!

இதுதான் மும்பை! சிவகாசி, திருப்
கோவை, சென்னை உள்ளிட்ட
ில் நகரங்களின் குடியிருப்புகள்
து ஆய்வு செய்யப்படுமாயின்
ாழ இதனையொத்த சித்திரத்
நாம் பெறுவோம்.



மும்பை: இடிக்கப்பட்ட இடங்களுக்கு மக்கள் மீண்டும் வராமல் தடுக்க தனியார் பாதுகாப்புப் படை!

குடிசை இடிப்பு குறித்த ஓட்டுக் கட்சிகளின் அணுகுமுறையிலும் தேசிய அளவில் பெருத்த வேறுபாடு இல்லை. மும்பையின் 40 லட்சம் குடிசைவாழ் மக்களுக்கு 8 லட்சம் இலவச வீடுகள் கட்டித் தருவதாக வாக்குறுதியளித்து ஏற்கெனவே ஆட்சியைப் பிடித்த சிவசேனா - பா.ஜ.க. அரசு, ஒரேயொரு வீடு கூடக் கட்டித் தரவில்லை.

2000-ஆம் ஆண்டுக்கு முன் அமைக்கப்பட்ட குடிசைப் பகுதிகள் அனைத்திற்கும் உத்தரவாதம் வழங்குவதாகக் கூறி ஆட்சியைப் பிடித்துள்ள காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணி, இப்போது 1995-இல் உருவான குடிசைப்பகுதிகளை இடிக்கிறது. அச்சிடப்பட்ட தேர்தல் அறிக்கையைக் காட்டிக் கேள்வியெழுப்பிய நிருபர்களிடம் ''தேர்தல் அறிக்கை தயாரித்ததில் நான் ஈடுபடவில்லை'' என்று தெனாவெட்டாகப் பதிலளிக்கிறார் முதல்வர் தேஷ்முக். மாநகராட்சியை கையில் வைத்திருக்கும் சிவசேனா குடிசை இடிப்புக்கு முழு ஆதரவு வழங்குகிறது.

''அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகட்டும். தங்குவதற்கு வீடில்லாதவர்கள் நகரத்திற்கு ஏன் வருகிறார்கள்? இந்தச் சேரிகள் இருக்கும்வரை மும்பை உலகத்தரம் வாய்ந்த நகரமாக ஆகவே முடியாது. சேரி மக்களால் எங்கள் வாழ்க்கை முறையே நாளுக்கு நாள் நாசமாகி வருகிறது. வெளிநாட்டுக் காரர்களிடம் நம் மதிப்பும் கெடுகிறது'' என்று நஞ்சைக் கக்குகிறார் விஜய் மகாஜன். பம்பாய் நகரப் பெரு முதலாளிகள் இணைந்து உருவாக்கியிருக்கும் ''மும்பைக்கே முதலிடம்'' என்ற அமைப்பிற்கு இவர் தலைவர்.

மும்பை நகரின் அரசுப் புறம்போக்குகளில் குடிசை போட்டிருக்கும் மக்களனைவரும் ''பொதுச் சொத்தைக் கொள்ளையிடும் திருடர்கள்; தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள்'' என்பது மகாஜனின் கருத்து. மும்பை சேரி மக்களின் வாக்குரிமையைப் பறிக்க வேண்டுமென்று கூடக் குரலெழுப்பியிருக்கிறார்கள் மும்பை முதலாளிகள்.

ஏழைகள் மீது வெறுப்பும், தொழிலாளி வர்க்கத்தின் மீது கட்டுங்கடங்காத துவேசமும் கொண்ட முதலாளி வர்க்கத்தினரின் வாயிலிருந்து இத்தகைய சொற்கள் வெளிவருவதில் வியப்பில்லை.

ஆனால், ''உயிர்வாழும் உரிமையைப் பறிக்காதே! மாற்று இடம் வழங்காமல் மக்களின் குடிசைகளை இடிக்காதே!'' என்ற கோரிக்கைகளுடன் நீதிமன்றப் படியேறிய மக்களிடம் உச்சநீதிமன்றம் கூறியதும் இதுதான்: ''பொது இடத்தை ஆக்கிரமித்தவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதென்பது பிக்பாக்கெட் திருடனுக்கு பரிசு வழங்குவதற்கொப்பானது'' என்று பிப்ரவரி 2000-த்தில் தீர்ப்பளித்தது உச்சநீதிமன்றம்.

ஆனால் இதே மும்பை நகரின் நடைபாதைவாசிகள் 1981-இல் மாநகராட்சியால் விரட்டப்பட்ட போது மேற்கூறிய தீர்ப்புக்கு நேரெதிரான தீர்ப்பை முன்னர் உச்சநீதி மன்றம் வழங்கியிருக்கிறது.

''உயிர்வாழும் உரிமை என்பது வாழ்க்கை நடத்துவதற்கான தொழில் செய்யும் உரிமையையும், வாழ்விடவுரிமையையும் உள்ளடக்கியது. எனவே நடைபாதை வாசிகளை ஒருதலைப்பட்சமாக அகற்றக் கூடாது'' என்று ஓல்கா டெலிஸ் என்ற பத்திரிகையாளர் தொடர்ந்த பொதுநல வழக்கில் உச்சநீதி மன்றம் கூறியது.

''சட்டப்பிரிவு - 21 வழங்கும் உயிர்வாழும் உரிமை என்பதில் வாழ்விடத்துக்கான உரிமையும் அடங்கியுள்ளதால் வீடு என்பது ஒரு குடிமகனின் அடிப்படை உரிமை'' என்றும் ''உயிர்வாழும் உரிமை என்பது பொருளுள்ளதாக இருக்க வேண்டும்; ஒவ்வொரு குடிமகனுக்கும் உறைவிடம் வழங்கு


படிப்பகம்

www.padippakam.com

1990 முதற்
குடிசை மாற்
அரசு நிறுத்தி
டன் இணைத்து

இவ்வாறு நக,
நகரங்களிலிருந்து
படும் 'குடிசை வாழ்
வோர் யார்?

நகரம் சார்ந்த உற்
ளின் பரப்பிலிருந்தும்,
மற்றும் சேவைத் துறைக
ருந்தும் மறுகாலனியாக்
யெல்லாம் துரத்துகிறதோ,
நகரத்தின் நிலப்பரப்பி
துடைத்தெறியப்படுகிறார்கள்.

கள். கடா
தொழில
சம்பள
1982-
போரா
அந்த
ருக்கு
மாத
10,1




மதுரை அரசு மருத்துவமனை அருகே அதிகாரிகளால் அகற்றப்படும் எஸ்.டி.டி. பூத்: சுயவேலைவாய்ப்புக்கு வேட்டு.

வது அரசின் சட்டபூர்வமான கடமை" என்றும் 1990-களில் உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்புகள் கூறின.

இந்த ஏட்டுச் சுரைக்காய் தீர்ப்பு களால் மக்கள் தமது அடிப்படை உரி மைகளை நடைமுறையில் பெற முடிந் ததில்லையெனினும், 'முற்போக்குத் தீர்ப்புகள்' என்று இன்றளவும் கொண் டாடப்படும் இந்தத் தீர்ப்புகள் ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழலில் வெளி வந்தவை.

இந்திராவின் அவசரநிலைப் பாசிச ஆட்சிக் காலத்தில் எல்லா அடிப்படை உரிமைகளும் முடக்கப்பட்டு, டெல்லி, மும்பை போன்ற பெருநகரங்களை அழகுபடுத்துவது என்ற பெயரில் சஞ் சய் காந்தியின் ஆணைப்படி ஆயிரக்க ணக்கான குடிசைகள் இடித்துத் தரைமட் டமாக்கப்பட்டன. அவசரநிலைப் பாசி சம் தோற்றுவித்த சிவில் உரிமை குறித்த விழிப்புணர்வு, இத்தகைய பல தீர்ப்புகளுக்கு வழிவகுத்தது. "இந்தச் சுரண்டல் சமுதாயத்தில் நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறமுடியாத பரிதாபத் துக்குரிய பலிகடாக்களான ஏழை மக் கள் சார்பாக யார் வேண்டுமானாலும் பொதுநலன் கருதி வழக்கு தொடர லாம்" என்ற உரிமையையும் அங்கீக ரித்தது உச்சநீதி மன்றம்.

இன்று சொற்கள் மட்டுமே எஞ்சியி ருக்கின்றன. அவற்றின் பொருளை நீதி மன்றம் நேரெதிராக மாற்றிவிட்டது. மதுரையின் தரைக்கடை வியாபாரிக ளைத் துரத்துவதும், சிவகாசித் தொழி லாளர்களின் வீடுகளை இடிப்பதும் 'பொதுநலன்' கருதி அவசியமானது என்கிறது மதுரை நீதிமன்றம்.

"தூய்மையான சுற்றுப்புறத்துக் கான உரிமை, உயிர்வாழும் உரிமை

யைக் காட்டிலும் மேன்மையானது" என்கிறது உச்சநீதி மன்றம். வாழ்விடத் திற்கான உரிமையோ பிக்பாக்கெட்டுக ளுக்கு வழங்கப்படும் அன்பளிப்பாகி விட்டது.

'மகாஜன் என்ற பணக்காரப் பன்றி யின் கொழுப்பெடுத்த பேச்சு' என்று நீங்கள் கருதியிருக்கக் கூடிய சொற்கள், மகாகனம் பொருந்திய நீதிபதிகளின் வாயிலிருந்து வெளிவரும் அரசியல் சட்டத்திற்கான பொழிப்புரைகளாகி விட்டன. பாசிசத்திற்கெதிரான ஜனநா யக வேடம் பூண்டிருந்த நீதிமன்றம், இன்று பாசிசத்தை சட்டபூர்வமாக அமல்படுத்தும் பொறுப்பைத் தானே முன்வந்து ஏற்றிருக்கிறது.

•••

நகர்ப்புற ஏழைமக்கள் மீது நாடு தழுவிய அளவில் கொடுக்கப்பட்டிருக் கும் இந்தத் தாக்குதலுக்குக் காரணம் சாலைகளை அகலப்படுத்தும் திடீர்க் கரிசனையோ, சேரிகளைப் பார்க்கப் பொறுக்காத பணக்கார வர்க்கத்தின் வழக்கமான வெறுப்புணர்வோ, அல் லது ஏதோ சில நீதிபதிகளின் தற்செய லான கிறுக்குத்தனமோ அல்ல. இத்த கைய தனிப்பட்ட காரணங்கள் பல இருப்பினும், அவை செயல்படுவதற் கான களத்தை மறுகாலனியாக்கக் கொள்கைகள்தான் உருவாக்கியிருக் கின்றன.

மும்பைக்கே முதலிடம் என்ற திட் டத்துக்கு ஆலோசனை வழங்கிய மெக் கின்ஸி எனும் பன்னாட்டு நிறுவனம் எல்லா குடிசைப் பகுதிகளையும் நகரி லிருந்து அகற்றிவிட்டு, 2013-ஆம் ஆண்டிற்குள் இரண்டு லட்சம் கோடி ரூபாய் செலவில் 'அழகு மும்பை' உரு வாக்க ஆலோசனை கூறியிருக்கிறது.

சிறு தொழில்களை ஒ
கொள்கைகள் மற்றும் சிறு வணிக
ஒழிக்கும் "வாட்" வரிவிதிப்பு பே
வற்றின் மூலம் மக்களின் வா
கையை மேலிருந்து இடிக்கிறார் சிதம்
ரம். அவர்களது வாழ்விடத்தைக் கீழ
ருந்து பெயர்த்தெடுக்கின்றன மராட்
டிய முதல்வர் தேஷ்முக்கின் புல்டோசர்
கள்.

வேறு வார்த்தைகளில் கூறுவதெ
னில், விவசாயமும் சிறுதொழில்களும்
அழிந்து கோடிக்கணக்கான மக்கள் திக்
கற்றவர்களாகி பெருநகரங்களை
நோக்கி ஓடக் காரணம் - அரசின் மறுகா
லனியாக்கக் கொள்கைகள். இந்தக் கார
ணத்தைப் பாதுகாக்கிறார் சிதம்பரம்;
விளைவுகளை ஒழித்துக் கட்டுகிறார்
தேஷ்முக்.

பெருநகரங்களின் 70 சதவீத குடி
சைவாழ் மக்களை வெளியேற்றிவிட்
டால், 'ஆண்டை'களுக்குத் துணி
வெளுக்கவும், சாக்கடை அள்ளவும்,
தெருக்கூட்டவும் ஆள் வேண்டுமே!
"ஐம்பது மைலுக்கு வெளியே துரத்தி
னாலும் காலை 5 மணிக்கெல்லாம்
அவர்கள் வேலைக்கு ஆஜராகி விடு
வார்கள்" என்பது ஆண்டைகளுக்குத்
தெரியும். ஐ.டி. நிறுவனங்களின் ஊழி
யர்களை அள்ளிக் கொண்டு வருவ
தைப் போல, பேருந்து அனுப்பி இவர்
களைக் கொண்டுவரத் தேவையில்லை.
தங்கள் சொந்தக் காசில் அவர்கள்
வேலைக்கு வந்து சேர்வார்கள். எத்
தனை மைல் தொலைவிற்கு வெளியே
தள்ளினாலும், பசியே எரிபொருளாகி
தங்களை நோக்கி அவர்களைத் தள்ளிக்
கொண்டு வரும் என்பது முதலாளி
களுக்குத் தெரியும்.

மும்பையின் ஜுஹூ கடற்கரை
என இன்று அழைக்கப்படும் மோரா
கான் எனும் மீனவ கிராமத்தில் எஞ்சிய
ருக்கும் மீனவர் குடிசைகள் டிசம்ப




படிப்பகம்

www.padippakam.com

மாதம் தரைமட்டமாக்கப்பட்டன. அங்கே கடற்கரை மாளிகைகள் கட்டி வாழும் தேவ் ஆனந்த், டிம்பிள் கபாடியா, மாதுரி தீட்சித் போன்ற நட்சத்திரங்களுக்கு மேற்கூறிய குடிசை இடிப்பின் 'பொருளாதார சூத்திரம்' தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களுடைய 'அழகுணர்ச்சி', குடிசைகளை அப்புறப்படுத்தக் கோருகிறது.

மதுரை உயர்நீதி மன்றத்தின் நீதிபதி குடிசை இடிப்புக்கு உத்திரவிடும்போது மாதுரி தீட்சித்தின் அழகுணர்ச்சி அரசியல் சட்டத்தின் உணர்ச்சியாக அரிதாரம் பூசிக் கொள்கிறது. 'பொது நலன்' என்பதற்குப் புதுவிளக்கம் பிறக்கிறது.

மதுரை நகரின் மீது சட்டத்தின் சக்கரங்கள் சுழலும்போது, நடைபாதை வியாபாரிகளுடன், நடைபாதைக் கடவுளர்களும் சேர்ந்து நசுங்கிச் சாகிறார்கள். பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் விநாயகர்களுக்கும், விநாயகர் கலவரத்துக்கும் அனுமதி வழங்கிய நீதிமன்றம் ''மதத்தின் பெயரால் ஆக்கிரமிப்பு செய்வதை அனுமதிக்க முடியாது'' என்று இப்போது வேதம் ஓதுகிறது.

குடிசை இடிப்பு நடவடிக்கை, கிரிமினல் ஒழிப்பு நடவடிக்கையாகச் சித்தரிக்கப்படுகிறது. குடிசை வாழ் மக்கள் மீது கட்டப் பஞ்சாயத்து முதல் கற்பழிப்பு வரையிலான எல்லா அக்கிரமங்களையும் போலீசின் ஆசியுடன் நடத்தி வந்த தாதாக்கள், ஆக்கிரமிப்பை அகற்றும் இந்த நடவடிக்கையின் மூலம் ஒழிக்கப்பட்டுவிட்டதாக செய்தி வெளியிடுகின்றன பத்திரிகைகள். புல்டோசரைப் பயன்படுத்தி ரவுடிகளைக் 'ஒழிக்கும்' அதிசயத்தையும் நாம் காண்கிறோம்.

35 ஆண்டுகளாக சிவகாசியின் வெம்பக்கோட்டைத் தெருவில் வாழ்ந்து வந்த தொழிலாளர்களை ஒரே ஒரு உத்தரவின் மூலம் ஆக்கிரமிப்பாளர்களாக்கி அவர்களைத் தண்டித்துவிட்டது நீதிமன்றம். ஆனால், அந்த 'ஆக்கிரமிப்பாளர்களிடம்' சொத்து வரி, குழாய் வரி, மின்கட்டணம் வசூலித்த நகராட்சி அதிகாரிகள் மீதோ, ரேசன் அட்டையும் வாக்காளர் அடையாள அட்டையும் வழங்கிய மாநில அரசு மீதோ நடவடிக்கை இல்லை.

''35 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தால் ஒரு ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த முடியாது; பொது இடத்தை ஆக்கிரமித்த திருடர்களுக்குப் பரிசு வழங்க முடியாது'' என்பதுதான் நீதிபதிகளின் வாதம்.

நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்களும் அரசு ஊழியர்களும் உழைத்துச் சேர்த்த அவர்களுடைய 'தனிப்பட்ட சொத்தான' பென்சன் நிதி, தனியார் முதலாளிகளிடம் வழங்கும் நோக்கத்திற்காக அரசால் களவாடப்பட்டிருக்கிறது. ''கற்பழிப்பு முடிந்துவிட்டது; இனி கத்திப் பயனில்லை; தாலி கட்ட ஆதரவு தாருங்கள்'' என்று பென்சன் மசோதாவுக்கு இடதுசாரிகளிடம் ஆதரவு கேட்கிறார் சிதம்பரம். சிதம்பரத்தின் இந்த ஆக்கிரமிப்பை தகர்க்க எந்த புல்டோசரை ஏவுவது?

நீதிமன்றத்தின் ஆசியுடன், சர்வ கட்சி ஒத்துழைப்புடன் இன்று நகர்ப்புறங்களில் நடத்தப்படும் இந்த நடவடிக்கைகள் ஆக்கிரமிப்பை அகற்றும் நடவடிக்கைகள் அல்ல; இது உழைக்கும் வர்க்கத்தின் மீது ஆளும் வர்க்கம் தொடுத்திருக்கும் ஆக்கிரமிப்புப் போர். உள்நாட்டுத் தொழில்கள் மீது, மக்கள் தம் சொந்தக் கையை ஊன்றி உருவாக்கிக் கொண்ட வாழ்க்கை மீது, நமது வாழ்வுரிமை மீது எதிரிகள் தொடுக்கும் போர்.

பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமிக்கும் யூதக் குடியேற்றம், ஈழத்தை ஆக்கிரமிக்கும் சிங்களக் குடியேற்றம் ஆகியவற்றுக்கும், குடிசைப் பகுதியை ஆக்கிரமிக்கும் இந்த 'நட்சத்திர'க் குடியேற்றத்துக்கும் வேறுபாடில்லை. பாகிஸ்தானில் நுழையும் இந்திய இராணுவத்தின் டாங்கிகளுக்கும், வெம்பக்கோட்டைத் தெருவில் நுழைந்த புல்டோசர்களுக்கும் இடையிலான வேறுபாடு சக்கரங்களின் எண்ணிக்கையில் மட்டுமே! நம்மீது ஒரு உள்நாட்டுப் போரைப் பிரகடனம் செய்திருக்கிறார்கள் எதிரிகள். போரை, போரால் எதிர்கொள்வோம்!

• பாலன்

## ''உழைக்கும் வர்க்கப் பெண்களே, ஒன்று சேருங்கள்!''

**அ**னைத்துலக மகளிர் தினத்தை (மார்ச்-8) ஒட்டி, திருச்சியில் ம.க.இ.க. மகளிர் குழுவினர் மார்ச் 15-ஆம் நாளன்று எழுச்சிமிகு அரங்கக் கூட்டத்தை நடத்தினர். ''உழைக்கும் வர்க்கப் பெண்களே ஒன்று சேருங்கள்'' என்ற முழக்கத்தின் கீழ் நடந்த இக்கூட்டத்தில், சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் எதிரான இப்போராட்ட நாளைக் கொச்சைப் படுத்தும் முதலாளித்துவ செய்தி ஊடகங்களையும், உழைக்கும் பெண்களின் போராட்டத்தை தனிப்பட்ட குடும்பத்தில் ஆணுக்கு எதிரான போராட்டமாகத் திசை திருப்பி வரும் பெண்ணியவாதிகள் மற்றும் தன்னார்வக் குழுக்களை அம்பலப்படுத்தியும் தோழர் வனிதா தலைமையுரை ஆற்றினார். அதைத் தொடர்ந்து, ''மறுகாலனியாதிக்கமும் பெண்களும்'' என்ற தலைப்பில் வழக்குரைஞர் தோழர் பானுமதியும், ''வர்க்கப் போராட்டமும் பெண்கள் விடுதலை-யும்'' என்ற தலைப்பில் ம.க.இ.க. இணை- செயலர் தோழர் காளியப்பனும் சிறப்பு- ரையாற்றினர். பின்னர், சாதி - மத மூடத்- தனங்களை எதிர்த்தும் போ- ராட்ட உணர்வூட்டு- வகையிலும் சிறுவர்களி- புரட்சிகர கலை நிகழ்ச்- யும், மகளிர் குழுவின- தயாரித்த சிறந்த பெண்- யார்? என்பதைக் காட்டு- வகையில் அமைந்த நாட- மும் சிறப்பானதொரு வ- வேற்பைப் பெற்றத- திரளாக வந்திருந்த பெ- களிடம் புதிய நம்பி- கையை விதைத்த இக்கூ- டம், பெண்கள் அமைப்- ரீதியாகத் திரண்டு போரா- வேண்டிய கடமைை- உணர்த்துவதாக அமை- தது.



— பு.ஜ. செய்தியாளர்-



படிப்பகம்

www.padippakam.com

## தமிழக சட்டமன்றம்:

# ஜெயாவின் அடாவடித்தனம் எதிர்க்கட்சிகளின் கையாலாகாத்தனம்

'விதி'ப்படி, சொல்லி வைத்தது போல் இயங்குகிறது, தமிழக சட்டமன்றம். பெரும் ரகளை; அதன் நடுவே, வழக்கமான கவர்னர் உரை, வழக்கமான 'பட்ஜெட்' விவாதம், கடைசியில், 'சட்டசபையில் ஜனநாயகம் இல்லை' என்ற எதிர்க்கட்சிகளின் வழக்கமான கூட்டு ஒப்பாரி!

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய தமிழகத்து எதிர்க்கட்சிகளின் கூற்றுப்படியே, தமிழகத்தின் இன்றைய நிலைமை இதுதான்:

- சுனாமி பேரழிவால் தமிழகத்தின் 13 மாவட்டங்களில் இலட்சக்கணக்கான விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளன. இவற்றுக்கான நிரந்தர நிவாரணம் எதுவும் கவர்னர் உரையில் இல்லை.

- தமிழகத்தில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை எதுவும் இல்லாமல் தவிக்கிறார்கள். குறிப்பாக, 50 இலட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டுக் காத்திருக்கிறார்கள். இதில் 17 இலட்சம் பேர் பெண்கள்.

- அரசு அலுவலகங்களில் 10 லட்சம் வேலைவாய்ப்புகள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருக்கின்றன.

- விவசாயம், தொழில் துறை, கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம் போன்ற 12 சமூக நல திட்டங்களில் "அரசின் எதிர்காலத் திட்டங்கள் எதுவும் இல்லை."

- தமிழகத்தின் உயிராதாரமான காவிரி நதிநீர் பிரச்சினை, சென்னையைப் போலவே தமிழகம் முழுக்க நிலவும் குடிநீர் தட்டுப்பாடு எந்த பிரச்சினையையும் தீர்க்கும் திட்டம் கவர்னர் உரையிலோ, நிதிநிலை அறிக்கையிலோ இல்லை.

ஆனால், இந்த வெற்று உரைதான் கவர்னர் உரையாக ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்டமன்றத்தில் வாசிக்கப்பட்டது. உடனே, "எங்கள் கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றி" என்று தி.மு.க. உள்ளிட்டு அனைத்து எதிர்க்கட்சிகளும் தமிழ் உரைக்காக ஜெயலலிதா அரசுக்கு "நன்றி" தெரிவித்தன.

பிறகு, பேச்சுப் போட்டியில் ஆர்வமாகக் கலந்துக் கொள்ளும் பள்ளி மாணவர்கள் போல், கவர்னர் உரை, பட்ஜெட் விவாதம் என்ற தலைப்புகளின் கீழ் வரிசையாகப் பேச ஆரம்பித்தார்கள், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்.

பேசும் தலைப்புப் பற்றி எந்த விபரமும் தெரியாத அ.தி.மு.க. உறுப்பினர்கள், "அம்மாவைப் போற்றி" என்ற மனப்பாடச் செய்யுளை மட்டும் பாடிவிட்டு அமர்ந்துவிட்டனர்.

காங்கிரசுக் கட்சியின் சட்டமன்றத் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவருக்கு பிடித்த சோனியா அம்மாவை போற்றி பாடினார். கொதிப்படைந்த ஜெயலலிதா "காலி டப்பா" என்று அவரைத் திட்டியவுடன், அவர் அவசரமாக "சுனாமி" பற்றி பேச ஆரம்பித்தார். தமிழகத்தில் சுனாமி நிவாரணப் பணிகள் தாமதமாக நடப்பதாக ஜெயலலிதா அரசு மீது குற்றம் சாட்டினார். அதற்குப் புள்ளி விவரங்களுடன் பதிலளித்த ஜெயலலிதா, "சுனாமி நிவாரண பணி தாமதத்திற்கு மத்திய அரசுதான் காரணம்" என்று எதிர் குற்றம் சாட்டினார். தமிழக அரசு மத்திய அரசிடம் சுனாமி நிவாரண உதவி திட்ட மதிப்பீடு ரூ. 4800 கோடி என்று முழுமையான அறிக்கை கொடுத்த பிறகும், வெறும் 983 கோடியே 68 லட்சம் மட்டுமே மத்திய அரசு ஒதுக்கியது. அதிலும் முதல் கட்டமாக வழங்கிய ரூ. 250 கோடியை அதில் கழித்துக் கொண்டது" என்றார்.

"அதுமட்டுமல்ல, சென்னைக்கு கடல்நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் சிதம்பரம் அறிவித்தாரே தவிர, அதை எவ்வாறு நிறைவேற்றுவது? அதற்கு எவ்வளவு நிதி? என்று அறிவிக்கவில்லை. அவர் 1000 கோடி ரூபாய் என்று அறிவித்தது தமிழ் நாட்டுக்கு மட்டும் அல்ல; ஒட்டு மொத்த இந்தியாவுக்கு! அதுகூட ஒதுக்கீடு அல்ல, மதிப்பீடு! இத்தலைப்பில் அவர் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கிய பணம் வெறும் 50 கோடிதான்! சென்னைக்கு ஒருநாள் குடிநீர் தேவை 840 மில்லியன் லிட்டர்! அவர் ஒதுக்கிய பணத்தில் 100 மில்லியன் லிட்டர் தண்ணீர் கூட வராது!" என்றார். உங்கள் தலைவர் சிதம்பரம் அறிவித்த தொகையை வழங்காத "நாணயம் அற்றவர்" அறிவித்த தொகையை கொடுக்க "வக்கற்றவர்" என்று சாடினார்கள், அ.தி.மு.க. உறுப்பினர்கள்.

தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு ஜெயா அரசு அறிவித்தபடி மிதிவண்டி வழங்காததால், விழுப்புரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த +2 மாணவிகள், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடத்திய திடீர் சாலை மறியல் போராட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

மறுபுறம், தி.மு.க. உறுப்பினர்கள், தாங்கள் பிரதான பதவிகள் வகிக்கும் காங்கிரசு தலைமையிலான மத்திய கூட்டணி ஆட்சியை ஆதாரத்துடன் விமர்சித்த ஜெயலலிதாவிற்குப் பதில்தர வக்கற்று பிரச்சினையை வேறு திசைக்கு இழுத்தனர்.

''இந்திய ராணுவத்தை ஜெயலலிதா அவமதித்து விட்டார். 'சுனாமியால் ஒதுங்கிய அழுகிய பிணங்களை இராணுவம் தொட மறுத்து விட்டது' என்று அவதூறு பரப்பினார்'' என்று தேசபக்த நாடகமாடினார்.




**மக்களை வாட்டும் பிரச்சினைகளுக்குப் போராட முன்வராத தமிழக எதிர்க்கட்சிகள், தங்களின் சுயநல நோக்கங்களுக்காக சென்னை - அண்ணாசாலையில் நடத்திய சாலை மறியல்.**

உடனே, ஜெயலலிதா கோப்புகளை அவர்கள் முகத்தில் வீசினார். ''மேஜர் ஜெனரல் பரம்வீர்சிங் தலைமையிலான இராணுவத்தினர் ஒரு பிணத்தைக் கூட எடுக்கவில்லை'' என்று தமிழகத்தின் வருவாய் ஆணையர் சந்தானம் எழுதிய அரசு குறிப்பின் மேல், தலைமைச் செயலர் ஒப்புதல் கையொப்பம் இருப்பதை பகிரங்கப்படுத்தினார்.

பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல சக பிழைப்புவாத அரசியலின் பிதாமகன்களான தி.மு.க.வினரை விடாமல், தோலுரித்து தொங்க விட்டார் ஜெயா. 'வெளிநடப்பு' செய்வதாக அலறிக் கொண்டு ஓடிய தி.மு.க.வினரோடு பதுங்கி ஓடிய 'காம்ரேடு'களை மடக்கிப் பிடித்தார், ஜெயலலிதா.

தமிழகத்தின் ''போக்குவரத்து கழகங்களை நடத்துவது சிரமமாக இருக்கிறது. மக்கள் நலன் கருதி, மத்திய அரசு டீசல் விலையை குறைக்க, கம்யூனிஸ்டு கட்சிகள் மத்தியில் வலியுறுத்த வேண்டும்'' என்றார். ''உள்நாட்டு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் வகையில் வேளாண் இறக்குமதி பொருட்களுக்கு வரியை மத்திய அரசு குறைத்து விட்டது ஏன்?'' என்று கம்யூனிஸ்டு கட்சிகளைக் குடைந்தார்.

'ஆளும் மத்திய அரசில் அமர்ந்து கொண்டு வறுமையையும், வேலையில்லா திண்டாட்டத்தையும் இந்தியா முழுக்க திணித்துக் கொண்டு என்னிடமே கேள்வியா?' என்று எதிர்க் கட்சிகளை எகிறிப் பந்தாடினார் ஜெயலலிதா! சவாலுக்குப் பயந்து வெளியில் ஓடிய எதிர்க்கட்சியினர், 'சட்டசபையில் ஜனநாயகமே இல்லை' என்று நடுத்தெருவில் ஆர்ப்பாட்டம் செய்து, சென்னையின் பிரதான போக்குவரத்தை மறித்தனர். அரை மணி நேரத்தில் அங்கு சென்ற கருணாநிதி நாற்காலியில், சாலை நடுவில் அமர்ந்து கொண்டு ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

காங்கிரசுத் தலைவர்கள் 'காலி டப்பாக்கள்' அல்ல! கருணாநிதி ரயில் வராத தண்டவாளத்தில் தலை வைத்த கோழை அல்ல! அவர், 'அய்யய்யோ கொல்றாங்களே' என்று அலறியது இழுக்கல்ல! என்று நிரூபிக்க, உடனே தெருவுக்கு வரத் தயங்காத இவர்கள், இவ்வாறு எத்தனை மக்கள் பிரச்சினைகளுக்காக தெருவில் உடனே மறியலில் இறங்கினார்கள்? தங்களை விமர்சித்த உடனேயே, சட்டசபைக்குள்ளேயே ''மிரட்டும் பாணியில், தாக்கும் தோரணையில்'' ஆளும் கட்சியினருக்குப் பதிலடிக் கொடுக்கும் இவர்கள், மக்களின் கோரிக்கைகளுக்காக இவ்வாறு கோபப்பட்டிருக்கிறார்களா? தாங்களுக்குப் பேச வாய்ப்பளிக்கவில்லை என்றவுடன் சட்டமன்றத்தின் தலைவரான சபாநாயகரை ஆவேசமாக நோக்கிப் பாயும் இவர்கள், ''அடுத்து என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ?'' என்று அரைநொடியில் சட்டமன்றத்தையே பதற்றத்தில் ஆழ்த்தும் இவர்கள், ஒரே ஒரு தடவை, மக்கள் பிரச்சினைகளுக்காக சட்டசபையை இப்படி முடக்கி இருக்கிறார்களா?

கந்துவட்டிக் கடனைக் கட்ட முடியாமல் மானம் இழந்து, விவசாயிகளும் தொழிலாளர்களும் தற்கொலை செய்து கொண்டு மடியும்போதும் அலட்டிக் கொள்ளாமல், அப்போதும் ஆளுங்கட்சியிடம் வேண்டுகோள் விடுப்பதும் மனுக்கொடுப்பதுமான 'பண்பட்ட அரசியல்' பண்ணும் இவர்கள், தங்கள் மானம் போனதற்கு மட்டும் மல்லுக் கட்டுகிறார்களே ஏன்? அடிதடியில் மோதி கொள்கிறார்களே ஏன் இழந்த தங்கள் மானத்தையு மனுக்கொடுத்து காப்பாற்றி கொள்ள வேண்டியது தானே?

சுனாமி நிவாரண பணிகள் தாமதம், காவிரி பிரச்சினை போன்ற மக்களின் உயிராதா மான கோரிக்கைகளுக்கு சாலை மறியலோ, சட்டமன் றத்திற்கு வெளியிலே போராடாத எதிரிணியின தங்கள் தானைத் தலைவர்க ளின் தனிப்பட்ட 'புகழுக்கு களங்கம் கற்பித்தால் மட்டும் சட்டத்திற்கு வெளியில் சென்று மிரட்டு கிறார்கள்.

மையத்தை ஆளும் கட்சிகள், மாநிலத்தை ஆளும் கட்சிகள் என்று ஒரே திசையில், ஒரே கப்பலில் பயணம் போகும் ஓட்டுப் பொறுக்கிகள், தாங்கள் எதிர்க்கட்சிகள்தான் என்ற மயக்கத்தை மக்களிடம் உருவாக்க ஓயாமல் நிழல் யுத்தத்தை நடத்துகிறார்கள்; மக்களை தொடர்ந்து மடையர்களாக்குகிறார்கள். ''ஜனநாயக விரோத ஜெயலலிதாவும், ஜனநாயக மீட்பு எதிர்க்கட்சிகளும்'' என்ற நையாண்டி நாடகத்தை வீர காவியமாக மாற்ற முயற்சிக்கிறார்கள்.

அந்தோ பரிதாபம்! நாடகத்தின் இடையில் நாடகத்தின் கோமாளியே பாடும், ''நாடாளுமன்ற ஜனநாயகம்'' என்ற கண்ணீர் ததும்பும் பாடலை கொஞ்சம் கேளுங்கள்! 8.9.2004 தேதி துக்ளக் தலையங்கத்தில் வந்த 'தீம் சாங் இது!

''பாராளுமன்றம், ஏதோ கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு ஜனநாயக் கோவில் போலவும், அங்கே எல்லாமே புனிதமாக இருந்து வந்து, இப்போது திடீரென்று கெட்டு விட்டது போலவும் பேசுவது படிப்பதற்கு சுவையாக இருக்கலாம்; ஆனால், அது நடைமுறை உண்மை அல்ல. நமது பாராளுமன்றமும், நமது அரசியலின் ஒரு அங்கமே; நமது அரசியலில் உள்ள வறட்டுத்தனம் அங்கேயும் இருக்கத்தான் செய்யும். இதற்கு மேல் அந்த அமைப்பிடம் எதிர்பார்ப்பது தகாது'' நாடாளுமன்ற சட்டமன்ற ஜனநாயகக் கதையின் முடிவை, இதைவிடத் துல்லியமாக சோகமாக வேறு யாரால் சொல்ல முடியும்?

● பச்சையப்ப


படிப்பகம்

www.padippakam.com

# நக்சல்பாரி புரட்சியாளர்கள் - ஆந்திர அரசாங்கம் சண்டை நிறுத்தம் - பேச்சு வார்த்தை

# கானல் நீர் தாகம் தீர்க்காது

ஆந்திர மாநில அரசாங்கத்துக்கும், இந்தியக் கம்யூனிஸ்டு (மாவோயிஸ்ட்) கட்சிக்கும் இடையிலான சண்டை நிறுத்தம் மற்றும் அமைதிப் பேச்சு வார்த்தை, அதிகாரபூர்வ அறிவிப்பின்றி ஏறக்குறைய முறிந்து போய் விட்டது என்றே சொல்லலாம். போலீசு மீண்டும் பழைய முனைப்புடன் தேடுதல் மற்றும் போலி மோதல் கொலைகளை நடத்தி வருகிறது. இ.க.க. (மாவோயிஸ்ட்) தவிர, வேறு பிற நக்சல்பாரிப் புரட்சியாளர்களும் வேட்டையாடப் படுகின்றனர். பதிலடி கொடுக்கும் முகமாக இ.க.க. (மாவோயிஸ்ட்) கொரில்லாக் குழுக்களும் எதிரிகள் என்று அடையாளம் காணும் நபர்களை அழித்தொழிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

கர்நாடகாவில் இ.க.க. (மாவோயிஸ்ட்) கட்சியின் முக்கியத் தோழர்களில் இருவர்கள் ''என்கவுண்டர்'' என்ற பெயரில் போலீசால் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு எதிர்த்தாக்குதல் தொடுக்கும் முகமாக அண்டை மாநிலமான ஆந்திராவில் இருந்து வந்த கொரில்லாக் குழு, ஒரு போலீசு முகாமைத் தாக்கி ஏழு போலீசாரைக் கொன்றதோடு, சில ஆயுதங்களையும் கைப்பற்றிக் கொண்டு சென்றுள்ளனர். ஆத்திரம் கொண்ட கர்நாடகா போலீசார் பேருந்துகளைக் கொளுத்தி வெறியாட்டம் போட்டுள்ளனர். வீரப்பனைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட கர்நாடகா அதிரடிப் படை நக்சலைட் வேட்டையில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

சண்டை நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் இவ்வாறு முறிந்து போகும் என்பது இ.க.க. (மாவோயிஸ்ட்) கட்சிக்கு நன்றாகவே தெரியும். இருந்தும் மனித உரிமை மற்றும் ஜனநாயக அறிவுஜீவிகள் அதற்கான முயற்சிகளில் இறங்கியபோது, இவர்களும் விருப்பமுடன் ஈடுபட்டனர். அதற்கான காரணங்கள் என்ன?

முக்கியமாக, மூன்று காரணங்களுக்காக, சண்டை நிறுத்தமும் பேச்சு வார்த்தைகளும் இ.க.க. (மாவோயிஸ்ட்) களுக்கு அவசியமாக இருக்கிறது. முதலாவதாக, அக்கட்சி பின்பற்றிய அரசியலற்ற போர்க்குணமிக்க பொருளாதாரவாதமும், அலைந்து திரியும் கொரில்லாக் குழுக்களின் இடது சந்தர்ப்பவாதச் சாகசங்களும் காரணமாக இதன் ''புரட்சிகர வன்முறையும்'' அரசின் ''எதிர்ப்புரட்சிகர வன்முறையும்'' ஆந்திர மாநில மக்களிடையே எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டன; உடனடியாக சண்டை நிறுத்தம் - அமைதி மற்றும் வளர்ச்சித் திட்டப் பாதை என்ற முழக்கம் மேலோங்கி விட்டது. இரண்டாவதாக, தொடர்ச்சியாக சந்திரபாபு நாயுடு ஆட்சியின் கீழ் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒன்பதாண்டு பாசிச ஒடுக்குமுறை பெரும் பின்னடைவு - இழப்பு, தேக்கத்தை ஏற்படுத்திவிட்டது. மகாராஷ்டிரா, சட்டிஸ்கர், ம.பி., ஒரிசா மற்றும் பீகார் என்று பிற மாநிலங்களுக்கு தனது இயக்கத்தை அக்கட்சி விரிவுபடுத்தியுள்ள போதிலும், வட தெலுங்கானாவில் அது மிக மோசமான பின்னடைவையும் இழப்பையும் சந்தித்தது. ஆந்திர மாநிலத்தின் பிற பகுதிகளில் அக்கட்சி தனித்தனி இலக்குகளைத் தாக்கும் அலைந்து திரியும் குழுக்களாகி விட்டன. மூன்றாவதாக சிறு - பெரு நகரங்களில் மக்களின் ஆதரவைப் பெறத் தவறி தனிமைப் போய் விட்டது.

இ.க.க. (மாவோயிஸ்ட்) குழுவின் தலைமைப் பிரதிநிதி இதைப் பின்வருமாறு ஒப்புக் கொள்கிறார்.

''கேள்வி: அரசியல் ரீதியில் நீங்கள் பலமாக உள்ள பகுதிகளில் இருந்துகூட உங்கள் (ஆயுதக்) குழுக்கள் பின்வாங்குகின்றனவே?

பதில்: முடிவுகள் எடுப்பதில் தாமதமாக்கியதால் சில இழப்புகளை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எதிரியைத் திறமையாக நாங்கள் எதிர்கொள்ள முடியவில்லை; ஏனென்றால், எங்களை விட ஏற்கெனவே எதிரி முன்னேறியிருந்தான். சில பகுதிகளில் எங்களால் எதிரியைத் தடுத்து நிறுத்த முடிந்தது. மக்கள் கொரில்லாப் படையை நீண்டகாலமாக அமைக்காததால் நாங்கள் இழப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.'' (இந்து நாளேடு, 17 அக். 2004)

இ.க.க. (மாவோயிஸ்ட்) பலமாக இருந்த கிராமப்புறங்களில் மட்டுமல்ல; நகரப்புறங்களில், நடுத்தர வர்க்கங்கள் மத்தியில் கூட அக்கட்சி பலவீனமடைந்துள்ளதாக தலைமை ஒப்புக் கொள்கிறது.

''கேள்வி: ஏறக்குறைய ஒரு பத்தாண்டுகளாக மாணவர்களையும் தொழிலாளர்களையும் புரட்சிகர இயக்கங்களால் ஈர்க்க முடியவில்லை. நகரங்களிலும் நகரப்புற மையங்களிலும் அது தனது செல்வாக்கை இழந்துள்ளது, ஏன்? நீங்கள் தெரிந்தெடுத்துள்ள ஆயுதப் போராட்டப் பாதை காரணமாக மாணவர்கள் இயக்கத்தில் சேரத் தயங்குகிறார்களா?

பதில்: இது உண்மைதான். நகரங்கள், நகர்ப்புற மையங்களில் இயக்கத்தைப் பராமரித்து விரிவுபடுத்துவதில் நாங்கள் தோற்றுப் போயுள்ளோம். சிறு, பெரு நகரங்கள் வழக்கமாகவே எதிரி (அரசு)யின் பலமான செல்வாக்கில் உள்ளன. ஒடுக்குமுறையின் போது இயக்கத்தைப் பராமரிப்பதற்கான தெளிவானதொரு யுத்த

அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ஆந்திர அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள்.




படிப்பகம்

www.padippakam.com

தந்திரத்தை வகுக்கத் தவறிவிட்டோம். ஆமாம்! இது ஒரு பிரச்சினைதான்; இப்போது சிறு, பெரு நகர்ப்புறங்களில் பணிபுரிவதற்கான ஒரு ஆவணம் தயாரித்துள்ளோம். இப்போது அப்புதிய யுத்தத் தந்திரத்தை நாங்கள் நிச்சயம் அமலாக்குவோம்.'' *(இந்து நாளேடு, 17 அக். 2004)*

தமது பின்னடைவுக்குக் காரணம், ஏதோ நடைமுறை நீதியிலான அணுகுமுறைப் பிரச்சினை என்றுதான் இ.க.க. (மாவோயிஸ்ட்) பார்க்கிறது. தனது அணிகளில் கணிசமானவர்கள் துரோகிகளாகி, எதிரிகளின் கூலிக் கொலைக் குழுக்களில் சேர்வதற்குக் கூட, கடந்த காலத்தில் ஆள்சேர்ப்பதில் நேர்ந்த கவனக்குறைவு, கறாரற்ற அணுகுமுறைதான் காரணமென்று இ.க.க. (மாவோயிஸ்ட்) தலைமை கூறுகிறது. இனி கறாராக, கவனமாக இருக்கப் போவதாகக் கூறுகிறது.

ஆனால் இ.க.க. (மாவோயிஸ்ட்) -இன் குறைபாடுகள் என்பவை அதன் அரசியல் சித்தாந்தத் தவறுகளிலேயே இருக்கிறது. அரசியல் போராட்டங்கள் மூலமாக மக்களை அணிதிரட்டி ஆயுதப் போராட்டங்களுக்கு அடிப்படையை உருவாக்குவது என்பதற்குப் பதிலாக, ஆயுதப் போராட்டங்கள் மூலமாகவே மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்றுத் தங்களை ஆதரிப்பார்கள் என்ற அதன் பார்வையிலேயே குறைபாடுகள் உள்ளன.

ஆயுதப் போராட்டம் மூலம் மாபெரும் சாதனைகளை ஈட்டிவிட்டதாகக் கூறிக் கொள்ளும் இ.க.க. (மாவோயிஸ்ட்) தலைமை, ஆந்திர அரசாங்கத் திடமும், நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகளிடமும் அரசியல் ரீதியில் தோற்றுப் போய் விட்டதாக மறைமுகமாக ஒப்புக் கொள்கிறது. இந்தியப் புரட்சிகர சக்திகளுக்கு உண்மையில் இந்த நிலை வருத்தமளிக்கிறது.

*''அக்கறை கொண்ட குடிமக்கள் கமிட்டி (சி.சி.சி.)யின் ஜனநாயக அறிவுஜீவிகளை அரசாங்கத்தால் தன் பக்கம் வெல்ல முடிந்துவிட்டது. ராஜசேகர ரெட்டியின் அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததில் இருந்து சி.சி.சி.யை நம்பிக்கைக்குரியதாக எடுத்துக் கொண்டு, அரசாங்கத்தின் கண்ணோட்டத்தை ஜனநாயகவாதியின் ஆறுதலளிக்கும் அனுசரணையோடு முன்வைக்கும்படி தள்ளிவிட்டது. அரசாங்கம் நேரடியாக முன்மொழிந்திருந்தால் பலரும் எதிர்த்திருக்கக் கூடிய சண்டை நிறுத்த நிபந்தனைகள், இதுவரை சமுதாயத்தில் ஓரளவு மதிப்பும் மரியாதையும் பெற்றுள்ள அறிவுஜீவிகளின் வாயிலிருந்து வெளிவந்ததனால் ஓரளவு நியாயமும் மரியாதை, நம்பிக்கையையும் பெற்று விட்டன. நக்சல்பாரிகள் காடுகளோடு நின்று கொள்ள வேண்டும் அல்லது தங்கள் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்காக நிராயுதபாணிகளாக மட்டுமே கிராமங்களுக்கு வரவேண்டும்; அவர்கள் தமது அணிகளுக்கு ஆள் சேர்க்கக் கூடாது அல்லது வெடிபொருள் ஆயுத சக்தியைப் பெருக்கிக் கொள்ளக் கூடாது. அரசு அடக்குமுறை தளர்த்தப்பட்டுள்ளதைப் பயன்படுத்திக் கொண்டு எந்த வகையிலும் தம்மை அவர்கள் பலப்படுத்திக் கொள்ளக் கூடாது; அரசு அதிகாரிகளை அவர்கள் மக்கள் முன் நிறுத்துவதற்கு ஆணையிடவோ, விசாரிக்கவோ கூடாது. சண்டை நிறுத்தத்தின்போது போலீசு எத்தனை உளவாளிகளை (துப்புத் தருபவர்களை) உருவாக்கிக் கொண்டாலும் அவர்களைக் கொல்வதை மட்டுமல்ல, எந்த வகையிலும் தொல்லைப்படுத்தக் கூடாது. இந்த நிபந்தனைகளை உருவாக்கியவர்கள் போலீசு உயர் அதிகாரிகளான ஒரு அரவிந்தராவோ ஒரு பூர்ணசந்திரராவோ ஆக இருக்கலாம். ஆனால், சி.சி.சி.யின் ஜனநாயகவாதிகளுடைய ஒப்புதல் காரணமாக அவை ஓரளவு மரியாதைக்குரியவைகளாக ஆகின்றன. இந்த அறிவுஜீவிகள் காட்சிப்படுத்திய ஆர்வமிகு ஆத ...பு புதிய அரசாங்கத்துக்கு பெரும் நிம்மதியைக் கொடுத்திருக்கிறது; அதன் நிபந்தனைகள் நியாயமானவை என்ற தோற்றத்தை அது இப்போது தரமுடிகிறது!'' (பீப்பிள்ஸ் மார்ச், செப். 2004)*



**பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டுவிட்டு, தமது மறைவிடத்திற்குத் திரும்பும் முன்பாக, போலீசாருடன் கை குலுக்கி விடைபெறும் தோழர் இராமகிருஷ்ணா.**

ம.யு. குழுவின் 25 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்திற்கு பிறகு, ஆந்திராவின் பரந்துபட்ட மக்கள் சமாதானத்தையும், தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக அமைப்புக்குள்ளாகவே வளர்ச்சி - முன்னேற்றத்தையும் கோருகிறார்கள். தங்களுக்குத் தேவையானதெல்லாம் ஜனநாயக வாய்ப்பு தான் என்று மக்கள் கூறுகிறார்கள். ம.யு. குழுவினர் நல்லவர்கள்தாம்; இருந்தாலும், அவர்களின் ஆயுதந் தாங்கிய நடவடிக்கைகளுக்குப் பிறகு வரும் போலீசு ஒடுக்குமுறை - தாக்குதல்களைத் தாங்க முடியவில்லை; (ம.யு. குழுவின் ஆயுத நடவடிக்கைகள் உட்பட) எல்லா வன்முறைச் செயல்களும் நிறுத்தப்பட வேண்டும்; தங்களுக்குத் தேவையானது அமைதியான வாழ்வும், சில சீர்திருத்தங்கள் - வளர்ச்சி திட்டங்களும்தாம் என்று கோருகிறார்கள்.

அரசியல் அணிதிரட்டலின்றி ஆயுதப் போராட்டத்தை உறுதியாகத் தொடர்ந்து நடத்துவதால் மட்டும் புரட்சியின் பக்கம் மக்கள் வந்துவிடுவார்கள் என்பது உண்மையல்ல; இந்த அரசியல் அமைப்பு இனியும் நீடிக்கக் கூடாது என்பதை மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் உணரவில்லை. இன்னமும் இந்த அரசியல், சமூகப் பொருளாதார அமைப்பு மீதான பிரமைகள் நீடிக்கின்றன; ஓட்டுக் கட்சிகள் மீதான வெறுப்பு ஒட்டு மொத்த அரசியல் அமைப்பு மீதான வெறுப்பு என்றும், மக்கள் ஆயுதப் போராட்டத்துக்குத் தயாராகி விட்டார்கள் என்றும் முடிவு செய்வதற்கு, பேரணிகளுக்கு மக்கள் கூடுவதை ஆதாரமாக கருத முடியாது என்பதையே ஆந்திர அனுபவங்கள் காட்டுகின்றன.

(முற்றும்)

—ஆசிரியர் குழு

www.padippakam.com

# சி.பி.எம்.

# பாட்டாளி வர்க்க கட்சியா? முதலாளித்துவ கம்பெனியா?

போலி கம்யூனிஸ்ட் கட்சியான சி.பி.எம்., தனது 18-வது அகில இந்திய மாநாட்டை ஏப்ரல் மாதத்தில் நடத்தவுள்ளது. இதற்கு முன்னதாக அக்கட்சி செயல்படும் மாநிலங்களில், மாநில மாநாடுகளை நடத்தி வருகிறது. கேரள மாநில மாநாட்டில், வழக்கம் போலவே குழுச் சண்டைகள் பகிரங்கமான நாய்ச் சண்டையாகி சந்தி சிரித்தது. இக்குழுச் சண்டைகள் பதவிக்கான சண்டையாக மட்டுமின்றி, கட்சி சொத்துக்களை அனுபவிப்பதற்கான அதிகாரச் சண்டையாகவும் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது.

இழப்பதற்கு ஏதுமில்லாத தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் சி.பி.எம். கட்சிக்குள் சொத்துத் தகராறா? - நீங்கள் ஆச்சரியப்பட்டு புருவத்தை உயர்த்தலாம். கட்சி ஊழியர்களும் ஆதரவாளர்களும்தானே ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிக்கு சொத்தாக இருக்க முடியும்; அப்படியிருக்க, சி.பி.எம். கட்சிக்குள் சொத்து தகராறு எப்படி வர முடியும் என்று நீங்கள் அதிசயிக்கலாம்.

ஆனால், சி.பி.எம். ஒரு கம்யூனிஸ்ட் கட்சியே அல்ல. கட்சி என்ற பெயரில் அது ஒரு கம்பெனியை நடத்துகிறது. கேரளாவில் மட்டும் அக்கம்பெனியின் சொத்து மதிப்பு ஏறத்தாழ 4000 கோடி ரூபாய்! கம்பெனி என்றால் அதற்கு ஒரு ''பாஸ்'' உண்டு. கேரள சி.பி.எம். கட்சி செயலர் பினரயி விஜயன், இக்கம்பெனியின் தலைமை ''பாஸ்'' ஆக உள்ளார்.


வடக்கு கண்ணனூரில் ''ரப்கோ'' எனும் ரப்பர் கூட்டுறவுக் கழகம் 1997-லிருந்து இயங்கி வருகிறது. ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ. 450 கோடிக்கு வர்த்தகம் செய்யும் இந்நிறுவனத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். இந்த நிறுவனத்தின் பொறுப்பில் இருந்து கட்டுப்படுத்துபவர்கள் சி.பி.எம். கட்சியினராவர். இப்போது தொழிலை விரிவுபடுத்த அன்னிய நிதி முதலீட்டு நிறுவனங்களிடம் ரூ. 1300 கோடி பெற ''ரப்கோ'' முயற்சித்து வருகிறது. சி.பி.எம். கட்சியினர் அன்னிய மூலதனத்தை எதிர்ப்பவர்களாயிற்றே என்று உங்களுக்கு சந்தேகம் வரலாம். அப்படி சந்தேகிப்பது தவறு. ஏனென்றால், அன்னிய மூலதன எதிர்ப்பு என்பது சி.பி.எம். கட்சியின் கொள்கை. ஆனால் ''ரப்கோ'' அன்னிய மூலதனத்தை வரவேற்பது என்பது வர்த்தகம். அதாவது, கொள்கை வேறு; வர்த்தகம் வேறு!

கூட்டுறவுக் கழகங்கள் மூலம் தொழில் செய்வது சிக்கல் இல்லாமல், சாதகமாக இருப்பதால், சி.பி.எம். கம்பெனியினர் ஏராளமான கூட்டுறவுக் கழகங்களைத் தொடங்கி தொழிலை விரிவுபடுத்தி வருகின்றனர். கேரள கூட்டுறவு மருத்துவமனை சம்மேளனம், தலைச்சேரி கூட்டுறவு மருத்துவமனை, கேரள மாநில கூட்டுறவு சங்கம் முதலானவற்றின் தலைமைப் பொறுப்பில் ஈ. நாராயணன் என்ற சி.பி.எம். கட்சியின் முதலாளித்துவ காம்ரேடு உள்ளார். இவர் மூலமாக ''தலைச்சேரி மருத்துவ அறக்கட்டளை'' எனும் ஐந்து நட்சத்திர மருத்துவமனையையும் மருத்துவக் கல்லூரியையும் நிறுவ சி.பி.எம். கட்சி முயற்சித்து வருகிறது.

ஏற்கெனவே மலபார் பிராந்தியத்தில் தலைச்சேரி கூட்டுறவு மருத்துவமனையை சி.பி.எம். நடத்தி வருகிறது. இதுதவிர, மலப்புரம் மாவட்டத்தில் பெரிந்தல்மண்ணில் ஈ.எம்.எஸ். நினைவு மருத்துவமனையையும், முன்னாள் கட்சி செயலாளர் ஏ.பி. வர்க்கி பெயரால் ஒரு மருத்துவமனையையும் நடத்தி வருகிறது. இவையெல்லாம் ஏழைகளுக்கான இலவச மருத்துவமனைகள் அல்ல. அரசு மருத்துவமனைகளின் அவலத்துக்கு எதிராகப் போராடாத சி.பி.எம்., அடுத்தடுத்து தனியார் மருத்துவமனைகளைத் திறந்து மக்களுக்குச் 'சேவை' செய்கிறது. ''வாருங்கள் தோழர்களே, குறைந்த கட்டணம் தான்!'' என்று அழைக்கிறது.

இந்த சாதாரண சேவையும் போதாதென்று உயர்தர சேவை செய்ய தலைச்சேரியில் பலகோடி ரூபாய் மதிப்பில் ஐந்து நட்சத்திர சொகுசு மருத்துவமனையைக் கட்ட முயற்சித்து வருகிறது. இதுதவிர, எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு தலைச்சேரியில் ஒரு ''ஹைப்பர் மார்க்கெட்'' (பல சூப்பர் மார்க்கெட்டுகளைக் கொண்டு மேலை நாட்டு பாணியில் அமைந்தது) தொடங்கவும் தீர்மானித்துள்ளது. உள்ளூர் சிறு வியாபாரிகளை ஒழித்துக் கட்ட பெரு முதலாளிகள் சுபிக்ஷா, ஃபுட்வேர்ல்டு முதலான

தலைச்சேரியில் அமையவுள்ள ஐந்து நட்சத்திர அதிசிறப்பு மருத்துவமனையின் மாதிரி வடிவமைப்பு - ஒரு ஓவியரின் கற்பனையில்.



www.padippakam.com

சூப்பர் மார்க்கெட்டுகளைத் தொடங்கும்போது, சி.பி.எம். கட்சியினர் அதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியுமா என்ன? எனவேதான் போட்டியில் முந்த களத்தில் இறங்கி விட்டார்கள்!

தொழில் என்று வந்துவிட்டால், எந்த தொழிலில் அதிக லாபம் கிடைக்கிறதோ, அதில் முதலீடு செய்வதுதான் அறிவுடைமை. 'மார்க்சிஸ்டு'கள் முட்டாள்களா என்ன? மலபார் சுற்றுலா வளர்ச்சி கூட்டுறவு சங்கம் மூலமாக கேளிக்கை பூங்காக்கள் (சென்னையிலுள்ள எம்.ஜி.எம்; கிஷ்கிந்தா, வி.ஜி.பி. போன்றவை) தொடங்க முனைந்தனர். ஆனால் காங்கிரசு அரசாங்கம் கூட்டுறவுக் கழகங்களையும் வங்கிகளையும் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததால், 'மார்க்சிஸ்டு'களின் இலட்சியக் கனவு உடனடியாக ஈடேறவில்லை. எனவே, இப்போது மலபார் மனமகிழ்ச்சி பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு அறக்கட்டளையை, கண்ணனூர் மாவட்டச் செயலாளர் எம்.வி.கோவிந்தன் தலைமையிலான குழு மூலம் தொடங்கி கேளிக்கை பூங்காங்களை நிறுவ முயற்சித்து வருகின்றனர்.

இது மட்டுமின்றி, அனைத்து மாவட்டங்களிலும் தகவல் தொழில்நுட்ப மையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர். இல்லாவிட்டால் சத்யம், விப்ரோ, இன்போசிஸ், காக்னிசன்ட் முதலான பெரு முதலாளிகள் இத்துறையில் நுழைந்து ஆதிக்கம் செலுத்தக் கிளம்பி விடுவார்களே! அதை முளையிலேயே கிள்ளியெறிவதற்காகத்தான் தொலைநோக்குப் பார்வையுடன் இவற்றைத் தொடங்கத் தீர்மானித்துள்ளனர்.

சரி, இவற்றுக்கெல்லாம் எப்படி பணம் திரட்டுவது? முதலாளித்துவ நிறுவனங்களைப் போல, 'மார்க்சிஸ்டு'களும் பங்குகளை விற்று பணம் திரட்டுகிறார்கள். யாரிடமெல்லாம் பங்குகளை விற்று பணம் திரட்டலாம் என்பதற்கு வரையறை எதுவும் கிடையாது. யாராயிருந்தாலென்ன? எந்தத் தொழில் செய்தாலென்ன? தமிழனாக இருந்தால் போதும் என்று நன்கொடைகள் - பகிர்வுகள் திரட்டும் தமிழினப் பிழைப்புவாதிகளைப் போலவே, 'மார்க்சிஸ்டு'களும் எல்லோரிடமும் நிதி திரட்டுகிறார்கள். சி.பி.எம். கட்சியின் ''கைரளி டி.வி.'' நிதி நெருக்கடியால் தொடர்ந்து இயங்க முடியாமல் தத்தளித்தபோது, எல்லோரிடமும் நிதி திரட்டி அதைத் தூக்கி நிறுத்தி விட்டார்கள்.

கைரளி டி.வி.யின் 25 இலட்ச ரூபாய் பங்குகளை சென்னையைச் சேர்ந்த கள்ளச் சாராய வியாபாரியான புருசோத்தமன் வாங்கியுள்ளார். கேரளத்தில் 36 பேரின் சாவுக்குக் காரணமான கள்ளச்சாராயத் 'தோழர்' மணியச்சன் பல லட்ச ரூபாய்க்கான பங்குகளை வாங்கியுள்ளார். இதுதவிர, வெளிநாடுகளில் வாழும் மலையாளிகளிடமும் பல கோடி ரூபாய்க்கு கைரளி டி.வி.யின் பங்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 'மார்க்சிஸ்டு'களால் மத அடிப்படைவாதக் கட்சியாகச் சித்தரிக்கப்படும் இந்திய யூனியன் முசுலீம் லீக் கட்சியின் எம்.பி.யான அப்துல் வகாப் என்கிற பெருமுதலாளி கூட, பல கோடிக்கு பங்குகள் வாங்கி, கைரளி டி.வி.யின் இயக்குனர் குழுவிலும் அங்கம் வகித்தார். பின்னர், காங்கிரசு கூட்டணியிலுள்ள முசுலீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படி எதிர்க்கட்சி நிறுவனத்தின் பொறுப்புகளில் இருக்கக் கூடாது என்று அக்கட்சித் தலைமை வலியுறுத்தியதால், இப்போது அவர் அப்பொறுப்பில் இல்லை. இதேபோல், கட்சியின் ''தேசாபிமானி'' நாளேட்டுக்கும் பலரிடம் பங்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இவையெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். கேளிக்கை பூங்காங்கள், ஐந்து நட்சத்திர மருத்துவமனைகள், தகவல் - தொழில்நுட்ப மையங்கள், தொலைக்காட்சிகள் மூலமாக ஒடுக்கப்பட்ட மக்களை எப்படி விடுதலை செய்ய முடியும் என்று நீங்கள் குழப்பமடைகிறீர்களா? அப்படியானால், நீங்கள் காலத்துக்கேற்ப மாறிக் கொள்ளாத பழமைவாதி! ஏனென்றால், 'மார்க்சிஸ்டு' கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரான எம்.ஏ.பேபி இப்படித்தான் சொல்கிறார். ''இன்னமும் பழமைவாதச் சிந்தனையில் இருப்பது சரியல்ல; காலத்துக்கேற்ப நாம் மாறவேண்டும். வர்த்தகம் மற்றும் தொழிலில் கிடைத்துள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதேசமயம் மருத்துவமனைகள், கேளிக்கை பூங்காக்களை கூட்டுறவு சங்கங்கள்தான் நடத்துகின்றனவே தவிர, கட்சியே நடத்தவில்லை. மேலும், கேளிக்கை பூங்காக்களை நிறுவுவது மார்க்சியத்துக்கு எதிரானதல்ல'' என்று சித்தாந்த விளக்கமும் அளித்துள்ளார்.

இனி என்ன கவலை! நீங்களும் ஒரு முதலாளித்துவ காம்ரேடாக - கம்யூனிச கனதனவாக விரும்பினால், 'மார்க்சிஸ்டு' கம்பெனியில் சேரலாம். கொள்கை அடிப்படையில் ''தனியார்மயம் ஒழிக! அன்னிய மூலதனம் ஒழிக!'' என்று முழங்கிவிட்டு, தொழில் அடிப்படையில் அன்னிய மூலதனத்துடன் கூட்டுச் சேர்ந்து ''பிசினஸ்'' செய்யலாம்; முதலாளிகளுக்கு போட்டியாக நீங்களும் தொழில் தொடங்கலாம்.

சே! இது என்ன துரோகத்தனம் என்று காறி உமிழ்ந்துவிட்டு, ஒடுக்கப்பட்ட மக்களை விடுதலை செய்வதற்கான மகத்தான புரட்சியில் பங்கேற்க விரும்பினால், நீங்கள் கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் அணிவகுக்கலாம்.

நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

● குமார்

இப்போது விற்பனையில்...

**ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் கீழ் இலங்கை**

— பி. இரயாகரன்




சுனாமியாவது மிச்சம் வைத்தது; இலங்கையை மிச்சம் வைக்காமல் சூறையாடும் ஏகாதிபத்திய ஓநாய்கள்; தேசிய நலனை உருக்குலைத்து ஊடுருவிப் பாயும் பன்னாட்டு நிதி மூலதனங்கள்; அரசியல் புதைகுழியில் புலிகள்.

என்ன நடக்கிறது இலங்கையில்?

— ஈழத் தமிழரின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமையை வர்க்கக் கண்ணோட்டத்தோடு ஆய்வு செய்யும் நூல்.

விலை: ரூ.70/- வெளியீடு: ''சமர்'', பிரான்ஸ்.

நூல் விலையுடன் ரூ. 16.00 சேர்த்துப் பணவிடை செய்து அஞ்சலில் நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

நூல் கிடைக்குமிடம்:

கீழைக்காற்று, 10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002. ✆: 044-2841 2367

www.padippakam.com

# ஏழைகளுக்கு நீதி எட்டாக் கனி

ஓட்டுக்கட்சி ரவுடிகளால், சாதி - மத வெறியர்களால், ஆளும் வர்க்கக் கும்பலால் உழைக்கும் மக்கள் மீது அன்றாடம் நூற்றுக்கணக்கான தாக்குதல்கள் ஏவிவிடப்படுகின்றன. இவற்றுள் ஏதோ ஒன்றிரண்டு தாக்குதல்கள்தான் நாடெங்கிலும் அம்பலமாகி மக்களின் கவனத்தை ஈர்க்கின்றன. இப்படி அம்பலமான தாக்குதல்களில் கூட குற்வாளிகள் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, கோவை வேளாண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மாணவிகள் தருமபுரி நகரில் அ.தி.மு.க. குண்டர்களால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தை தமிழக மக்கள் மறந்திருக்க முடியாது. கொடைக்கானல் ப்ளஸன்ட் ஸ்டே விடுதி ஊழல் வழக்கில் ஜெயாவிற்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டதற்காக, ஹேமலதா, கோகிலவாணி, காயத்ரி என்ற மூன்று அப்பாவி மாணவிகளின் உயிரை அ.தி.மு.க. காலிகள் பறித்தனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் பல வாய்தாக்களையும், இழுத்தடிப்புகளையும் சந்தித்த இந்த கொலைக் குற்ற வழக்கு இப்பொழுதுதான் நகரவே தொடங்கியுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் நடந்த இந்தக் கொலையை விசாரித்த சி.பி.சி.ஐ.டி. போலீசு பிரிவு, அ.தி.மு.க.வின் தருமபுரி ஒன்றியச் செயலராக இருந்த ராஜேந்திரன் மற்றும் ரவீந்திரன், நெடுஞ்செழியன் உள்ளிட்டு 30 அ.தி.மு.க. குண்டர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. ஆனால், 2001 தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றபின், இந்த வழக்கின் போக்கே தலைகீழாக மாறியது.

இந்த வழக்கில் அரசு சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டிருந்த அனைவரையும் அ.தி.மு.க. குண்டர்கள் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி மிரட்டியதால், 22 சாட்சிகளும் குற்றவாளிகளுக்குச் சாதகமாக பல்டியடித்தனர். அ.தி.மு.க. ஆட்சியில் இந்த வழக்கை நடத்த நியமிக்கப்பட்ட கூடுதல் மாவட்ட போலீசு கணகாணிப்பாளரும், சிறப்பு அரசு வழக்குரைஞரும் சாட்சிகள் மிரட்டப்பட்டதற்குத் துணை நின்றனர். வழக்கை நடத்திய கிருஷ்ணகிரி நீதிமன்றம், இந்த அயோக்கியத்தனத்தைக் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தது.

இதனால், கொல்லப்பட்ட கோகிலவாணியின் தந்தை வீராச்சாமி, இந்த வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். 2001 இறுதியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கு அ.தி.மு.க. அரசின் இழுத்தடிப்புகளால் ஒன்றரை ஆண்டுகள் நடந்தது.

22.08.03 அன்று வெளியான இந்த வழக்கின் தீர்ப்பில், ''கிருஷ்ணகிரி நீதிமன்றம் இந்த வழக்கைக் கண்துடைப்புக்காக நடத்துகிறது'' என ஒப்புக் கொண்ட சென்னை உயர்நீதி மன்றம், இவ்வழக்கை சேலத்திற்கு மாற்றியது. மேலும், சீனிவாசன் என்ற குற்றவியல் வழக்குரைஞரை இந்த வழக்கிற்கான அரசு வழக்குரைஞராக நியமித்தது.

அ.தி.மு.க. அரசோ, வழக்குரைஞர் சீனிவாசனுக்கு பணி நியமன உத்திரவு வழங்காமல், சேலம் நீதிமன்றத்திலும் இந்த வழக்கு ஒரு அடி கூட முன்னேறி விடாமல் தடுத்தது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வெளியாகி 14 மாதங்களாகியும் சீனிவாசனுக்குப் பணி நியமன உத்திரவு வழங்காததால், கோகிலவாணியின் தந்தை மீண்டும் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

கடந்த சனவரி மாதம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபொழுது, மூன்று மாணவிகள் கொல்லப்பட்ட வழக்கையே குழிதோண்டிப் புதைக்கும் நோக்கத்தோடு, ''இந்த கேஸ் கட்டு காணாமல் போய்விட்டது; டிச. 2003-லிருந்து கட்டைத் தேடிக் கொண்டிருக்கிறோம். புதிதாக கேஸ் கட்டு தயாரிக்கக் கால அவகாசம் வேண்டும்'' எனக் குண்டைத் தூக்கிப் போட்டது, தமிழக அரசு. ''இந்த வழக்கை மையப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கவா?'' என உயர்நீதி மன்றம் மிரட்டிய பிறகுதான், திடீரென காணாமல் போன கேஸ் கட்டு, திடீரென கண்டுபிடிக்கப்பட்டது.

ஏறத்தாழ ஐந்தாண்டுகள் கழித்து, சேலம் நீதிமன்றத்தில் தொடங்கியுள்ள இந்த வழக்கின் முதல் கட்ட விசாரணையில், வேளாண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு பேராசிரியைகள், பேருந்துக்குள் ஏறி பெட்ரோலை ஊற்றிய குற்றவாளியை அடையாளம் காட்டியுள்ளனர். எனினும், எந்த நேரத்திலும் சாட்சிகள் மிரட்டப்பட்டுக் கலைக்கப்படலாம் என்ற அச்சத்தை சேலம் நீதிமன்றமே வெளியிட்டுள்ளது.

•••

1987-ஆம் ஆண்டு உ.பி. மாநிலத்திலுள்ள மீரட் நகரைச் சேர்ந்த 42 முசுலீம்கள், பிரதேச ஆயுதப் படை போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலை, ஆர்.எஸ்.எஸ்.க்கு இணையாக போலீசு துறையும் இந்து மதவெறி பிடித்து அலைவதை நாடெங்கும் அம்பலப்படுத்தியது. இந்தப் படுகொலை நடந்து ஏறத்தாழ 18 ஆண்டுகள் ஆகிவிட்டாலும், குற்றம் சாட்டப்பட்ட 19 போலீசாரில் ஒருவர்கூட இன்றுவரை கைது செய்யப்படவில்லை.

இப்படுகொலை பற்றி விசாரணை நடத்தி ஒரு அறிக்கை தயாரிக்கவே, உ.பி. மாநில போலீசார் ஏழு ஆண்டுகள் எடுத்துக் கொண்டனர். இந்த அறிக்கையை, போலீசாரால் கொல்லப்பட்ட முசுலீம் குடும்பத்தினரின் கண்களில் கூட காட்ட மறுத்துவிட்டது, உ.பி. மாநில அரசு. இதனை எதிர்த்து பாதிக்கப்பட்ட முசுலீம்கள் வழக்கு தொடுத்த பிறகுதான், விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டது.

இதன் பிறகு 1996-ஆம் ஆண்டு, உ.பி. மாநில காசியாபாத் நீதிமன்றத்தில், குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றத்துக்குக் கொண்டு வராமலேயே, வழக்கு விசாரணை நாடகம் தொடங்கப்பட்டது. விசாரணையில் ஏதாவது விடிவு பிறக்கும் என நான்கு ஆண்டுகள் காத்திருந்த முசுலீம்கள், அதன் பிறகு இந்த நாடகத்தை நிறுத்தச் சொல்லி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

ஏறத்தாழ இரு ஆண்டுகள் கழித்து, உச்சநீதி மன்றம் இந்த வழக்கு விசார

www.padippakam.com





அ.தி.மு.க. ரவுடிகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட கோவை வேளாண் பல்கலைக்கழகப் பேருந்து; அத்தீயில் சிக்கி மாண்டு போன மாணவிகள் (இடமிருந்து) கோகிலவாணி, காயத்ரி மற்றும் ஹேமலதா.

ணையை உ.பி. மாநிலத்தில் இருந்து தில்லிக்கு மாற்றியது; புதிய அரசு வழக்குரைஞரை நியமிக்கச் சொல்லி, உ.பி. அரசுக்கு உத்திரவு போட்டது. அக்டோபர் 2002-இல் போடப்பட்ட உச்சநீதி மன்ற உத்திரவை, 'மதச் சார்பற்ற' முலயம் சிங் அரசு மார்ச் 2004 வரை கண்டு கொள்ளவேயில்லை. அதன் பின், உப்பு சப்பில்லாத ஒரு வழக்குரைஞரை, அரசு வக்கீலாக நியமித்து, தில்லி நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணையைக் கேலிக் கூத்தாக்கி விட்டது.

இக்கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட போலீசாரில் ஒருவன் கூட, தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படவில்லை. குற்றவாளிகள் அனைவரும் அரசு சம்பளத்தை வாங்கிக் கொண்டு, அரசின் பாதுகாப்போடு சுதந்திரமாகச் சுற்றி கொண்டு திரிகின்றனர். பாதிக்கப்பட்ட முசுலீம் குடும்பங்கள்தான், தங்கள் கைக்காசை செலவழித்து, நீதிமன்றப் படிகளில் ஏறி இறங்கி, நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

•••

'**சு**தந்திர' இந்தியாவில் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைப் பட்டியல் இட்டால், அதில் ஆந்திர மாநிலம் சுண்டூரில் நடந்த தாக்குதலைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சுண்டூர் தாழ்த்தப்பட்டோர், ரெட்டி சாதி நிலப்பிரபுக்களின் வயல்களில் வேலை செய்ய மறுத்ததாலும் படித்த இளைஞர்கள் தீண்டாமையை எதிர்த்ததாலும் போலீசின் துணையோடு ரெட்டி நிலப்பிரபுக்களால் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலில் மாண்டு போன தாழ்த்தப்பட்டோரின் பிணங்களைப் பிரேதப் பரிசோதனை செய்த தாழ்த்தப்பட்ட மருத்துவர் ரவிசந்தர் குமார் மனம் வெதும்பி தற்கொலை செய்து கொண்டார். அந்த அளவிற்கு சுண்டூர் தாக்குதல் மிகக் கொடூரமாக நடத்தப்பட்டது. கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களின் உடல்களை வெட்டித் துண்டாக்கி, சாக்குப் பையில் கட்டி துங்கபத்ரா ஆற்றில் வீசியெறிந்தனர், மேல் சாதி வெறியர்கள்.

இத்தாக்குதலில் 70 தாழ்த்தப்பட்டோர் இறந்து போயிருக்கலாம் எனக் கூறப்பட்டது. ஆனால், ஆந்திர அரசோ 9 பேர் மட்டுமே இறந்து போனதாக வழக்கில் பதிவு செய்துள்ளது.

இத்தாக்குதலில் இறந்து போனவர்களின் உறவினர்களுக்கு ஒரு வீடு, ஒரு ஏக்கர் நிலம், அரசாங்க வேலை எனச் சலுகைகளை வீசியெறிந்து, ரெட்டி நிலப்பிரபுக்களைக் காப்பாற்றி விடச் சதி செய்தது, ஆந்திர அரசு. தாழ்த்தப்பட்டோர் இச்சலுகைக்கு மயங்காமல், நீதி கேட்டு தொடர்ந்து போராடியதால், இவ்வழக்கை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

எனினும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 219 பேரில் ஏழு முக்கிய குற்றவாளிகளை இதுநாள் வரையில் கைது செய்யாமல், வழக்கு விசாரணைக்கு முட்டுக் கட்டை போடப்படுகிறது. சுண்டூர் தாக்குதல் 1991 ஆகஸ்டில் நடந்தது. ஆனால், இந்த வழக்கின் விசாரணை 13 ஆண்டுகள் கழித்து, டிச. 2004-இல்தான் நீதிமன்றத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்பொழுது கூட விசாரணையை நடத்தாமல், பிப். 2005-க்கு விசாரணை மீண்டும் தள்ளி வைக்கப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணை தொடங்குவதற்கு முன்பே, 29 குற்றவாளிகள் எவ்விதத் தண்டனையும் அடையாமல், இயற்கையாக மரணம் அடைந்து விட்டனர்; வழக்கு இப்படியே இழுத்துக் கொண்டு போனால், மற்ற குற்றவாளிகளுக்கும் இயற்கை மரணம் தான் தண்டனை போலாகிவிடும்! ''தெய்வம் நின்று கொன்றது'' என்று இத்தண்டனையை ஏற்றுக் கொள்ளவா முடியும்?

தருமபுரி, மீரட், சுண்டூர் போன்று நீதிமன்றம் என்ற ஊறுகாய் டப்பாவுக்குள் போடப்பட்டுள்ள வழக்குகளைப் பட்டியல் இட்டுக் கொண்டே போகலாம். தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகும் எனச் சட்ட வல்லுநர்கள் குறிப்பிடுவார்கள். இதன்படி பார்த்தால், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி மறுக்கப்பட்டு விட்டது என்றுதான் கூறவேண்டும்.

இந்த வழக்குகள் இன்றுவரை உயிரோடு இருப்பதற்கு சட்டத்தின் தயவோ, நீதிபதிகளின் நேர்மையோ, நாணயமோ காரணம் இல்லை. மாறாக, பாதிக்கப்பட்ட குடும்பங்களும், ஜனநாயக இயக்கங்களும் நீதி கேட்டு தொடர்ந்து நடத்தி வரும் போராட்டங்கள்தான் இந்த வழக்குகளின் மூச்சுக் காற்றாக இருந்து வருகிறது. இப்போராட்டங்கள் இல்லையென்றால், பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சட்டம் இன்னொரு முறை கொன்றிருக்கும்; நீதிமன்றமே இந்த வழக்குகளின் கல்லறை ஆகியிருக்கும்!

• செல்வம்

www.padippakam.com



# கால்நடை வளர்ப்பில் தாராளமயம் விவசாயிகளின் கழுத்துக்குச் சுருக்கு

இந்தியாவின் காடுகளிலுள்ள சிங்கம், புலி, நரி, ராஜநாகம் முதலான விலங்கினங்கள் படிப்படியாக அழிந்து வருவதாக ''அவுட்லுக்'' என்ற ஆங்கில வார ஏடு அண்மையில் ஒரு அட்டைப்படக் கட்டுரை வெளியிட்டது. காடுகளிலுள்ள அரிய விலங்கினங்கள் மட்டுமல்ல; நாட்டிலுள்ள கால்நடைச் செல்வங்களும் படிப்படியாக அழிந்து வருவதோடு, இனி இந்திய ஆடு-மாடுகளை மிருகக்காட்சி சாலையில்தான் பார்க்க முடியும் என்ற பேரபாயம் ஏற்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் இறைச்சிக்காக ஆடு - மாடுகளைக் கொல்வதால் அவை அழிந்து வருகின்றனவா என்றால் இல்லை; அல்லது ஏதாவது கொள்ளை நோய் தாக்கி வருகிறதா என்றால், அதுவும் இல்லை. மாறாக, இது கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்திவரும் புதிய பொருளாதாரக் கொள்கையால் உருவான பேரழிவு. உலக வங்கி - உலக வர்த்தகக் கழகத்தின் உத்தரவுப்படி ஆட்சியாளர்கள் பின்பற்றி வரும் தாராள இறக்குமதிக் கொள்கையால், இந்நாட்டின் கால்நடைச் செல்வங்கள் அழிக்கப்பட்டு வருவதோடு, கால்நடை வளர்ப்புத் தொழிலைச் சார்ந்துள்ள பல கோடி விவசாயக் குடும்பங்களை ஓட்டாண்டிகளாக்கும் சதி வேகமாக நடந்தேறி வருகிறது.

கால்நடைச் செல்வத்தில் உலகிலேயே இந்தியா முன்னணியில் உள்ளது. 28 கோடி மாடுகளைக் கொண்டு 8 கோடியே 40 லட்சம் டன் பால் உற்பத்தி செய்து, எண்ணிக்கையிலும் உற்பத்தியிலும் இந்திய நாடு முதலிடம் வகிக்கிறது. 46,830 கோடி ரூபாய் மதிப்புள்ள பால் பொருட்கள் சந்தையை ஈடு செய்வதோடு, ஏற்றுமதி செய்யுமளவுக்கும் உற்பத்தி பெருகியுள்ளது.

இன்னொருபுறம், வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பில் உலகளவில் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள நாடாக இந்தியா திகழ்கிறது. 18 கோடி எண்ணிக்கையைக் கொண்ட ஆடு வளர்ப்புத் தொழில் ஆண்டு ஒன்றுக்கு 2400 கோடி ரூபாயை ஈட்டித் தருகிறது.

இந்திய விவசாயிகள் ஆடு-மாடு வளர்ப்பதென்பது அவர்களின் வாழ்க்கைக்கான ஆதாரம். ஏறத்தாழ எட்டு கோடி விவசாயப் பெண்கள் ஓரிரு மாடுகளை வைத்துப் பால் உற்பத்தியில் ஈடுபட்டுத் தமது குடும்பத்தை நடத்தி வருகின்றனர். கிராமப்புறங்களிலுள்ள 70 சதவீத கால்நடைகள் நிலமற்ற கூலி-ஏழை விவசாயிகளிடமும் நடுத்தர விவசாயிகளிடமும்தான் உள்ளது. கால்நடை சார்ந்த பொருட்கள் இக்கிராமப்புற விவசாயிகளின் ஆண்டு வருமானத்தில் 20 முதல் 70 சதவீதம் வரை பங்களிக்கிறது. இயற்கை பொய்த்துப் போகும் போதும், விவசாய விளைபொருட்களின் விலை சந்தையில் வீழ்ச்சியடையும் போதும், விவசாயிகளின் வாழ்க்கைக்கு உத்திரவாதம் கொடுத்து காப்பவை இக்கால்நடைகள்தான். கிராமப்புறங்களில் அவசரத் தேவைக்கான வங்கிகளாக இருப்பவை இக்கால்நடைச் செல்வங்கள்தான்.

ஆனால், மேலை நாடுகளில் கால்நடை வளர்ப்பு என்பது இயந்திரமயமாக்கப்பட்ட பெருவீதத் தொழிலாகும். அங்கு முதலாளித்துவப் பண்ணையாளர்கள், பல ஆயிரம் மாடுகளைக் கொண்ட பண்ணைகளைக் கொண்டு பால் மற்றும் இறைச்சியை உற்பத்தி செய்து குவிக்கின்றனர். அந்நாடுகளின் அரசுகள் பால் மற்றும் இறைச்சி உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கும் 60 முதல் 100 சதவீதம் வரை மானியம் அளிக்கின்றன. விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களே இத்தொழிலைக் கட்டுப்படுத்தி இயக்குகின்றன. அவற்றின் இலாபவெறி அராஜகத்தால், மிதமிஞ்சிய பால் மற்றும் இறைச்சி உற்பத்தி அந்நாடுகளில் மலைபோல் குவிந்துள்ளன.

உதாரணமாக, பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் தமிழகத்தை விட சிறிய நாடான சுவிட்சர்லாந்து, ஆண்டொன்றுக்கு 380 கோடி லிட்டர் பால் உற்பத்தி செய்கிறது. ஏறத்தாழ 80 லட்சம் மக்கள் தொகை கொண்ட அந்நாட்டில் நபர் ஒன்றுக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ 475 லிட்டர் (இந்தியாவில் 80 லிட்டர்) பால் கிடைக்கிறது. இது அவர்களின் தேவைக்கு மிதமிஞ்சியதாகும். எனவே சுவிஸ் அரசு, பால் உற்பத்தியைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு பண்ணையும் எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ''கோட்டா'' முறையை நடைமுறைப்படுத்தி வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட இந்த அளவை மீறாமலிருக்கவும், மிதமிஞ்சிய உற்பத்தியை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பன்னாட்டு நிறுவனங்க


படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு மானியமும் அளிக்கிறது. இதே போலத்தான் இதர ஏகாதிபத்திய நாடுகளிலும் நடக்கிறது.

மிதமிஞ்சிய உற்பத்தியின் விளைவாக பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு விற்பனையில் தேக்கமும், ஒப்பீட்டளவில் இலாபம் குறைவதும் ஏற்படுவதால், அவை புதிய சந்தைகளைக் கைப்பற்ற வெறியோடு அலைகின்றன. ஏழை நாடுகளை அவற்றின் புதிய சந்தைகளாக மாற்றுவதற்கான சதிகள் பல அரங்குகளிலும் நடக்கின்றன. ஏழை நாடுகளின் சந்தையைக் கைப்பற்றுவதற்கு முக்கியமான தடைகளாக இருப்பவை, உள்ளூர் கால்நடை வளர்ப்புத் தொழிலும் இறக்குமதியின் மீதான கட்டுப்பாடுகளும்தான். இவ்விரண்டு தடைகளையும் தகர்ப்பதன் மூலம்தான் ஏழை நாடுகளின் சந்தையைக் கைப்பற்ற முடியும் என்பதால், பன்னாட்டு நிறுவனங்களும் ஏகாதிபத்தியவாதிகளும் வஞ்சக வலைவீசி ஏழை நாடுகளை அடிமைப்படுத்தக் கிளம்பியுள்ளனர்.

உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி கடந்த 1999-ஆம் ஆண்டின் இறுதியில் பா.ஜ.க. ஆட்சியில் பால் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்கள் உள்ளிட்டு 1,429 பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. இதற்கு முன்னதாகவே ''இன்டர் கார்ப்பரேஷன்'' என்ற பன்னாட்டு தன்னார்வக் குழு கால்நடை வளர்ப்புத் தொழிலைச் சிதைக்க களத்தில் இறங்கியது.

இத்தன்னார்வக் குழு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்று வருகிறது. 1996-ஆம் ஆண்டில் மத்திய கால்நடைத் துறை செயலகத்துடன் கூட்டுச் சேர்ந்து ''தேசிய கால்நடைக் கொள்கை''யை உருவாக்கியது. மேலும், அண்மையில் ஆந்திரா மற்றும் ஒரிசா மாநிலங்களின் கால்நடைக் கொள்கையை உருவாக்குவதில் பிரதான பங்காற்றியது. கொள்கைகளை வகுப்பது மட்டுமின்றி, அவற்றைச் செயல்படுத்துவதற்கான முறைகள், வடிவங்களைப் புகுத்துவதிலும் இத்தன்னார்வக் குழு வெற்றி பெற்றது. கால்நடை பராமரிப்புத் துறையின் சேவைகளான மருத்துவம், செயற்கை முறை கருவூட்டல் (சினை ஊசி) மற்றும் நோய் தடுப்பியல் சேவைகளைத் தனியார்மயமாக்குவதும், கால்நடை பராமரிப்புத் துறையின் இதர சேவைகளைக் கட்டண சேவையாக மாற்றுவதுமே இந்தப் புதிய தேசிய கால்நடைக் கொள்கையின் பிரதான அம்சங்களாகும்.

இத்தனியார்மயக் கொள்கையால் மிகப் பெரிய அளவில் பெய்ஃப் (Baif) என்ற தன்னார்வக் குழு ஆதாயமடைந்தது. இத்தன்னார்வக் குழு, 2004-ஆம் ஆண்டின் இறுதியில் 11 மாநிலங்களில் ஒரு லட்சம் கிராமங்களில் கால்நடைகளுக்குச் செயற்கை முறை கருவூட்டல் சேவையை மத்திய அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்கு எடுத்துள்ளது. இச்சேவைக்காக விவசாயிடமிருந்து ஒவ்வொரு முறையும் சராசரியாக ரூ. 100 வசூலித்து வருகிறது. இன்னும் ஓரிரு வருடங்களில் இத்தன்னார்வக் குழு மிகப்பெரிய ஏகபோக முதலாளித்துவ நிறுவனமாகப் பரிணமித்து விடும்.




**இனி, இந்தியாவில் பால் உற்பத்தியே இல்லாமல் போய் விடும். பாலைக் கொண்டே ஏகாதிபத்திய வல்லரசுகள் இந்திய நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தி கொள்ளையடித்துச் செல்லும். இத்தகைய வழிமுறைகளின் மூலம்தான் ''நெஸ்லே'' என்ற பன்னாட்டு நிறுவனம் அண்டை நாடான இலங்கையில் நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது.**

இத்தகைய கொழுத்த ஆதாயத்தைக் கண்டு ஜே.கே. குழுமமும் (ரேமண்ட் ஆடை நிறுவனம்) களத்தில் குதித்துள்ளது. இந்நிறுவனம் 7 மாநில அரசாங்கங்களிடமிருந்து செயற்கை முறை கருவூட்டல் சேவையைக் குத்தகைக்கு எடுத்துள்ளது. விவசாயிகளிடமிருந்து இதற்காக கட்டணம் வசூலிப்பதோடு, மாநில அரசுகளிடமிருந்தும் இச்சேவைக்காக இந்நிறுவனம் கட்டணம் வசூலிக்கிறது. ஆந்திர மாநிலத்தில் இவர்களின் 'சேவை'யினால் ஒரு மாடு சினை பிடித்தால், அரசு ரூ. 860 தரவேண்டும்; ஒரு கன்று பிறந்தால் ரூ. 3000 தரவேண்டும். ஆனால், சந்தையில் 6 மாத வயதான ஒரு கன்றுக்குட்டியின் விலை ரூ. 1000 கூட போகாது. இப்படி, இந்த 'மகத்தான' சேவையினால் மட்டும் கடந்த ஆண்டில் ஆந்திராவின் சித்தூர், அனந்தபூர் மாவட்டங்களில் மட்டும் 2 கோடி ரூபாய் நிகர லாபமாக இந்நிறுவனம் சுருட்டியது. இரண்டு மாவட்டங்களில் மட்டும் ரூ. 2 கோடி இலாபம் எனில், ஆந்திர மாநிலம் முழுவதும் சுருட்டிய இலாபம் எவ்வளவு கோடி? ஆந்திரா மட்டுமின்றி, 7 மாநிலங்களில் விழுங்கியது எத்தனை கோடி? ப. சிதம்பரத்துக்கே தெரியுமா என்பது சந்தேகம்தான்! குறைந்தபட்ச மதிப்பீட்டின்படி, ரூ. 1400 கோடிக்கு மேல் ஜே.கே. நிறுவனம் சுருட்டியிருக்கும்!

இன்னொரு புறம், ஏகாதிபத்தியங்களிடமிருந்து எச்சில் காசு பெற்றுக் கொண்டு ''சூழலியல்வாதிகள்'' என்கிற பெயரில் பல்வேறு தன்னார்வக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவை வனப்பாதுகாப்புத் துறையுடன் கைகோர்த்துக் கொண்டு ''புதிய வனப் பாதுகாப்புக் கொள்கை''யைத் திணித்து வருகின்றன. ஆந்திராவில், சந்திரபாபு நாயுடு ஆட்சிக் காலத்தில் இச்சூழலியவாதக் குழுக்கள் ''மேய்ச்சல் கொள்கை''யை உருவாக்கிச் செயல்படுத்தின. காடுகளில் கால்நடைகளை மேயவிடக் கூடாது; வெள்ளாடுகள் குருத்து இலைகளைத் தின்று காடுகளின் நீடித்த தன்மையை அழிக்கின்றன - என்பதுதான் இக்கொள்கையின் பிரதான அம்சம். இதன் விளைவாக, மலைவாழ் - வனவாழ் மக்கள் இனி வெள்ளாடுகளை வளர்க்க முடியாது. இயற்கை வளத்தின் மீதான அவர்களின் உரிமையும் வாழ்வுக்கான ஆதாரமும் பறிக்கப்படும். விவசாயிகளது உடலின் நீட்டிப்பாக உள்ள கால்நடைச் செல்வங்கள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விடும்.

www.padippakam.com

இவை ஒருபுறமிருக்க, புவிப்ப ரப்பு கூடுதலாக வெப்பமடைவதற்கு மீத்தேன் வாயுவும் ஒரு காரணமாகும். ஏகாதிபத்திய நாடுகளின் இயந்திரமய மாக்கப்பட்ட கால்நடைப் பண்ணைக ளிலிருந்துதான் அதிக அளவில் மீத் தேன் வாயு வெளியேறுகிறது. சுற்றுச்சூ ழலை நஞ்சாக்கி வரும் ஏகாதிபத்திய வாதிகள் இக்குற்றச்சாட்டிலிருந்து தப் பிக்கவும் திசை திருப்பவும் தமது கைக் கூலி விஞ்ஞானிகளைக் கொண்டு புதிய சதிகளில் இறங்கியுள்ளனர். ''இந் தியாவில் அளவுக்கதிகமாக அசைபோ டும் கால்நடைகள் உள்ளன. இவை நார்ச்சத்து நிறைந்த வைக்கோல், புல், சோளத்தட்டு முதலான தீவனங்களைக் கொண்டு வளர்கின்றன. எனவே, இந்தி யக் கால்நடைகள்தான் அதிகஅளவில் மீத்தேன் வாயுவை வெளியேற்றுகின் றன. அவைதாம் புவிபரப்பின் வெப்ப நிலை உயர்வுக்குக் காரணம். ஆகை யால், இந்தியக் கால்நடைகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண் டும்'' என்று கைக்கூலி இந்திய விஞ்ஞா னிகள் சிலர் வாதிட்டு வருகின்றனர். அமெரிக்கா சொன்னால் அது வேத வாக்கு! அதன்படி வருங்காலத்தில் இந் திய ஆட்சியாளர்கள், மீத்தேன் வாயுப் பெருக்கத்தைக் குறைப்பது என்ற பெய ரில், இந்தியக் கால்நடைகளைக் குறைக்க முயலுவார்கள்!

எல்லாவற்றுக்கும் மேலாக, இறக்கு மதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள தால், ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து பால் பொருட்கள் வெள்ளமெனப் பாய் கின்றன. டென்மார்க், நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்து கடந்த 2002-ஆம் ஆண்டில் மட்டும் 17000 டன் பால்பவுடரும் 12000 டன் நெய் யும் இறக்குமதியாகியுள்ளது. இந்திய அரசின் அன்னிய வணிக இயக்குநரகத் தின் (ஜூன் 2004) அறிக்கையின் படி, 2002-03 ஆம் ஆண்டில் ரூ. 688 கோடி யாக இருந்த பால் சார்ந்த பொருட்க ளின் இறக்குமதி மதிப்பு, 2003-04 ஆம் ஆண்டில் ரூ. 10,000 கோடியாக அதிகரித்துள்ளது. இதுவும் போதா தென்று, முந்தைய பா.ஜ.க. அரசு கடந்த ஆண்டு மே மாதத்தில் - நாடா ளுமன்றத் தேர்தலில் ஓட்டு எண் ணிக்கை தொடங்கும்போது, சலுகை இறக்குமதி தீர்வையில் அனுமதிக்கப் பட்டிருந்த 10,000 டன் பால்பவுடர் இறக்குமதி வரம்பை 15 மடங்கு (1,50,000 டன்) உயர்த்தியது.

நியூசிலாந்திலிருந்து வந்திறங்கும் ஒரு கிலோ நெய்யின் விலை ரூ. 64.54. சுவிஸ் நாட்டின் நெஸ்லே (Nestle), பிரான்சைச் சேர்ந்த சோடியால் (Sodiaal), பான்கிரைன் (Bongrain), லேக்டாலிஸ் (Lactalis), அமெரிக்கா வைச் சேர்ந்த ஷ்ரெய்பர் (Schreiber), நியூசிலாந்தைச் சேர்ந்த ஃபான்டெரா (Fonterra) முதலான பன்னாட்டு ஏக போக நிறுவனங்கள் ஒரு கிலோ பால் பவுடரை ரூ.30 முதல் ரூ.50 வரை கொண்டு வந்து கொட்டுகின்றன. இந் தப் பால்பவுடரைக் கொண்டு, பலதரப் பட்ட விளம்பர வித்தைகளுடன் பல வண்ண பாலிதீன் பாக்கெட்டுகளில் ஆரோக்யா, ஹெரிடேஜ், கோமாதா, திருமலா, தூத் எனப் பல பெயர்களில் இந்தியத் தரகு முதலாளிகள் பால் விற் பனையை பெருநகரங்களில் விரிவுப டுத்தி வருகின்றனர். கிராமப்புறங்களி லிருந்து வரும் பால், நகரப்புற சந்தை யில் ஏறத்தாழ 65% ஆக இருந்த நிலைமை போய், இன்று பாதிக்கும் கீழாக வீழ்ந்ததற்கு முக்கியக் காரணம், இறக்குமதியாகும் பால்பவுடர்தான்!

ஏகாதிபத்திய நாடுகளில் பால் உற் பத்திக்கும் ஏற்றுமதிக்கும் பெருமளவு மானியங்கள் வழங்கப்படுவதால், அந் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பால் பொருட்கள் விலை மலிவாக இருக்கின்றன. இந்தியாவிலோ பால் உற்பத்திக்கு அரசாங்கம் மானியம் தரு வதில்லை. சிறு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் ''மாட்டு லோன்'' வாங் கவே படாதபாடு படவேண்டியுள்ளது. இந்நிலையில் ஏகாதிபத்திய நாடுகளி லிருந்து கட்டுப்பாடின்றி பால் பொருட் கள் இறக்குமதியானால், அதனுடன் போட்டி போட்டுக் கொண்டு மலிவு விலையில் பால் பொருட்களை இந் திய சிறு விவசாயிகளால் விற்பனை செய்ய இயலாது. கால்நடை வளர்ப்புத் தொழில் அதிக முதலீடுகளைக் கோரு வதாலும், தீவனப் பொருட்களின் விலையேற்றத்தாலும் ஒரு லிட்டர் பாலை உற்பத்தி செய்ய விவசாயிக ளுக்கு ரூ. 6.50 முதல் ரூ. 10.75 வரை தேவைப்படுகிறது. ஆனால், இந்த அடக்கவிலைக்கேகூட விவசாயி களால் பாலை விற்க முடியாமல், நட் டப்பட்டுப் போண்டியாகி வருகிறார் கள். ஒரு கிலோ ரூ.100 - 120 என்றி ருந்த உள்நாட்டு நெய்யின் விலை, இன்று ரூ. 85 - 102 என்று வீழ்ச்சிய டைந்து விட்டது.

ஒருபுறம், கால்நடை இனப்பெருக் கச் 'சேவை'யில் தன்னார்வக் குழுக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் சுரண்டல்; மறுபுறம் வனப்பாதுகாப்பு என்ற பெயரில் மேய்ச்சல் நிலங்களில் விவசாயிகளின் உரிமை பறிப்பு; இன் னொருபுறம், கணிசமாக கால்நடைத் தீவனங்களின் விலையேற்றம்; எல்லா வற்றுக்கும் மேலாக, இறக்குமதி கட் டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதால், ஏகா திபத்திய நாடுகளிலிருந்து மலிவு விலையில் வெள்ளமெனப் பாயும் பால் பொருட்கள். - இத்தகைய தொடர் தாக்குதல்களால் இந்தியக் கால்நடை வளர்ப்புத் தொழில் படிப்படியாக நசுக் கப்பட்டு வருகிறது.

இனி ஆடு-மாடு வளர்ப்பதும், பால் உற்பத்தியில் ஈடுபடுவதும் யானையைக் கட்டி தீனி போடும் கதை யாக - கிராமப்புற மக்களுக்கு பெரும் சுமையாக மாறிவிடும். போண்டியா கும் விவசாயிகள் படிப்படியாக ஆடு-மாடுகளை விற்றுவிடுவார்கள்; பால் உற்பத்தியில் ஈடுபடவும் முன்வர மாட்டார்கள். இதன் விளைவாக பாலுக் குத் தட்டுப்பாடு ஏற்படும்; அதற்கேற்ப ஏகாதிபத்திய நாடுகளும் பால் விலையை உயர்த்தும். இந்தியாவில் சுயசார்புடன் பால் உற்பத்தியே இல்லா மல் போய், ஏகாதிபத்திய நாடுகளிடமி ருந்து பாலை வாங்குவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விடும். பாலைக் கொண்டே ஏகாதிபத்திய வல் லரசுகள் இந்திய நாட்டையும் மக்களை யும் அடிமைப்படுத்தி கொள்ளையடித் துச் செல்லும். இத்தகைய வழிமுறைக ளின் மூலம்தான் ''நெஸ்லே'' என்ற பன்னாட்டு நிறுவனம் அண்டை நாடான இலங்கையில் நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இந்நிலையில், பால், கால்நடை கள், விவசாயம், கைத்தொழில் என அனைத்தையும் நாசமாக்கி பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் வேட்டைக் கும் கொள்ளைக்கும் ஆதிக்கத்துக்கும் தாராள அனுமதியளிக்கும் ஆட்சி யாளர்களின் தனியார்மய - தாராளம யக் கொள்கையை இனியும் சகித்துக் கொள்ளப் போகிறோமா? கால்நடைச் செல்வங்கள் மிகுந்த விவசாய நாடான இந்தியாவைப் பாலுக்கும் உணவுக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் கையேந்த வைக்கும் தன்னார்வக் குழுக்களின் சதிச் செயலை, நாட்டை அடிமைப்படுத்தும் துரோகத்தனத்தை இனியும் அனுமதிக்கப் போகிறோமா? அல்லது, ''அர்ஜூன் அம்மா யாரு?'', ''4.5% கொழுப்பு சத்துள்ள பால்தான் உண்மையான பால்'' என்ற விளம்பரங் களில் மயங்கி, இறக்குமதியாகும் பால் பவுடரைக் கொண்டு பலவண்ண பாலி தீன் பைகளில் விற்கப்படும் பாலைக் குடித்து அடிமைகளாகக் கிடக்கப் போகிறோமா?

● செஞ்சுடர்

www.padippakam.com

## உயிர் குடிக்கும் தரைப்பாலம்:

# ஆளும் கும்பலைப் பணிய வைத்த மக்கள் போராட்டம்

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் நகரத்தின் மக்களுடைய போக்குவரத்துக்கு இதயமாக இருந்த மணிமுத்தாறு பாலம், கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் பெய்த பெரும் மழையின் வெள்ளப் பெருக்கில் சிதைந்து தன்னுடைய 125 ஆண்டுகாலச் சேவையை முடித்துக் கொண்டது. அது முதல் இந்நகர மக்கள் போக்குவரத்துக்குப் படும் அவதி சொல்லி மாளாது!

'அவசரத்திற்கு' என்று இரு சக்கர வாகனங்களில்கூடச் செல்ல முடியாத மரப்பாலம் ஒன்றைக் கட்டிய ஆளும் கும்பல் 'செலவு 7 லட்சம் ரூபாய்' என்று கணக்கு காட்டியது. நிரந்தர, மாற்று தரைப்பாலம் வேண்டி நகரின் அனைத்துக் கட்சிகள் மற்றும் சங்கங்கள் ஒன்று சேர்ந்து 'நகர் வளர்ச்சிக் குழு' என்ற அமைப்பின் கீழ் பாலத்தின் தெற்கு, மேற்கு இரு பகுதிகளிலும் உண்ணாவிரதம் இருந்தனர். அரசு, 4 மாதம் கழித்து, பாதையின் இரு முனைகளிலும் ஆக்கிரமித்துள்ள ஆளுங்கட்சி தலைவர்களின் கட்டிடங்களுக்குத் தீங்கு நேராமல் பாம்புபோல் வளைந்து நெளிந்து தரைப்பாலம் ஒன்றைக் கட்டியது.

பயணம் செய்பவர்களின் உயிருக்கு எமனாக, "உயிர் குடிக்கும் தரைப்பாலமாக" அது உருவாகியது. அதற்குக் காரணமான "ஆக்கிரமிப்புகளை அகற்றி தரைப்பாலத்தை நேராக்கு" என்ற கோரிக்கையின் கீழ் "மனித உரிமை பாதுகாப்பு மையம்" களத்தில் இறங்கியது. குமுறிக் கொண்டிருந்த மக்கள் இந்த அறைகூவலைப் பேரார்வத்துடன் வரவேற்று அணிதிரண்டனர். நகரின் அனைத்துக் கட்சிகளும், சங்கங்களும் இக்கோரிக்கையின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு போராட்டக் குழு நிறுவப்பட்டது. கோரிக்கைகளை வலியுறுத்தி 21.2.05 அன்று கண்டன ஆர்ப்பாட்டமும் 25.2.05 அன்று விருத்தாசலம் நகரப் பேருந்து நிலைய வாயிலில் மறியலும் நடத்தப்பட்டது. அடுத்து, 28.2.05 அன்று மக்களோடு இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்றும் போராட்டத் திட்டத்தை அறிவித்து போராட்டக் குழு பிரச்சாரம் செய்தது. இதன் நடுவில், சமரசக் கூட்டம் என்ற பெயரில் கோட்டாச்சியர், சாலை ஆக்கிரமிப்பாளரான அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் வாசு. சுந்தரேசன் மற்றும் போராட்டத்திற்கு சம்பந்தமில்லாத பலரை அழைத்து ஆக்கிரமிப்பு நிலம் "பட்டா நிலம்" தான் என்று தன்னிலை விளக்கம் அளித்தார். கும்பலோடு 'கோவிந்தா' போட்டு பிரச்சினையைக் கை கழுவ எத்தணித்த சமரசக் கூட்டத்தைத் தோலுரித்து வெளியேறியது, போராட்டக் குழு. 28.2.05 அன்று ஆக்கிரமிப்பு அகற்றும் போராட்டத்தை உறுதி செய்து பகிரங்கமாக அறிவித்தது.



பீதியடைந்த அரசு நிர்வாகம், ஒருபுறம் போலீசு மூலம் மிரட்டல், கைது, ஊர்வலம் மற்றும் கூட்டம் நடத்துவதற்குத் தடை என்று அடக்குமுறையை ஏவியது. மறுபுறம், அவசரமாக 27.2.05 அன்று நள்ளிரவில், அ.தி.மு.க. கட்சியினர் ஆக்கிரமித்து கட்டிய கட்டிடத்தின் சிறு பகுதியை மட்டும் இடித்து பாலத்தை நேராக்கும் முயற்சியில் இறங்கியது.

எனவே, போராட்டக் குழு ஆக்கிரமிப்பு அகற்றும் போராட்டத்தை தற்காலிகமாக தள்ளி வைக்க முடிவு செய்தது. இம் முதற்கட்ட வெற்றியைத் தொடர்ந்து, ஆறு அம்சக் கோரிக்கை மனுவை வருவாய் துறை ஆணையரிடம் அளித்து உடனடியாக நிரந்தர தீர்வை உருவாக்கும்படி வலியுறுத்தியது.

தகவல்:<br>
மனித உரிமை பாதுகாப்பு மையம், விருத்தாசலம்;<br>
மற்றும் விவசாயிகள் விடுதலை முன்னணி,<br>
விருதை வட்டம்.

## வாசகர் கடிதம்

• மைய அரசின் புதிய வரிவிதிப்புகளின் பின்னே மறைந்துள்ள உண்மையான நோக்கங்களை தலையங்கக் கட்டுரை எடுப்பாக உணர்த்தியது. மறைந்த ஓவியர் உதயனின் தூரிகையில் உருவான அற்புதமான அட்டைப்படக் கேலிச் சித்திரம், அவரது நினைவை என்றென்றும் நமது மனங்களில் நிறுத்தும். தன்னார்வக் குழுக்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் நோக்கங்கள் பற்றி தெளிவில்லாமல் இருந்த எனக்கு, "வட்டமிடும் பன்னாட்டு நிறுவனங்கள்" என்ற கட்டுரை பேருதவியாக அமைந்தது.

- புரட்சிக் கவிநேசன், தேரெழுந்தூர்

• வெனிசுலா அதிபர் சாவெசைத் தமது தோழராகக் காட்டிக் கொள்ளும் இடது - வலது போலி கம்யூனிஸ்டுகளின் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தும் விதமாக சரியான தருணத்தில் வெனிசுலா பற்றிய கட்டுரை வெளிவந்துள்ளது. சாவெஸ், அமெரிக்க எதிர்ப்பில் உறுதியாக இருக்கிறார். ஆனால், தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பாய்விரித்துக் கொண்டிருக்கும் போலி கம்யூனிஸ்டுகளுக்கு, சாவெசைப் பாராட்ட என்ன அருகதை இருக்கிறது?

- கதிரவன், சென்னை.

• மிச்ச மீதியிருக்கும் கிராமப்புற பொருளாதாரத்தையும், சூறையாடக் கிளம்பிவிட்ட பன்னாட்டு நிறுவனங்கள் பற்றிய கட்டுரையானது, கிராமப்புற எதார்த்த உலகத்தை கண்முன் விரித்துக் காட்டியது. காத்திருக்கும் அபாயத்தையும் கடமையாற்ற வேண்டிய அவசியத்தையும் எடுப்பாக உணர்த்தியது.

- மைவிழி, சென்னை.

• அதுவேறு, இதுவேறு என்று சந்தர்ப்பவாத சகதியில் புரளும் தமிழினப் பிழைப்புவாதிகளை மீண்டும் அம்பலப்படுத்திக் காட்டிய பெட்டிச் செய்தி வெகு சிறப்பு. தமிழகமே சுனாமி துயரத்தில் தத்தளிக்கும்போது, பொங்கல் வைத்துக் கொண்டாடக் கூப்பிடும் இவர்களது வக்கிர தமிழர் கண்ணோட்டத்தை மானமுள்ள தமிழர்கள் காறி உமிழ்வார்கள்.

- மா.சே., சென்னை.

• ஆழிப்பேரலை போன்று வரும் அரசு வரிவிதிப்புகளின் உள்ளர்த்தத்தை தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். சுமார் 20 ஆண்டு காலமாக 'வளரும் பொருளாதார' மயக்கத்தில் வீழ்ந்து கிடந்த நான் "புதிய ஜனநாயகம்" மூலம் புதிய கண்ணொளி பெற்றுள்ளேன். நரகம் வரப்போவதைப் பற்றி அறியாமல் சொர்க்கக் கனவுகளில் சீரழிந்து கொண்டிருக்கும் நம்மவர்களை அழிவிலிருந்து காப்பாற்றுங்கள்.

- என்.ஜே. கந்தமாறன், நேமம்.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai...

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85 Regn.No.TN/PMG(CCR)/621/03-05



ஆறுமுகம் குடும்பம்

# இந்த அநீதிக்குப் பழிதீர்ப்பது எப்போது?

விரக்தி, வேதனை, துயரம்; தற்கொலை! ஒருவரல்ல இருவரல்ல; 40-க்கும் மேற்பட்டோர் வேலையிழந்து, வாழ்விழந்து, துயரம் தாளாமல் கடந்த ஈராண்டுகளில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கடந்த டிசம்பரில் திண்டிவனத்தைச் சேர்ந்த ஆறுமுகம் உடலெங்கும் மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக் கொண்டு மாண்டு போனார். நான்கு குழந்தைகளுடன் அவரது குடும்பம் பரிதவிக்கிறது. ஆறுமுகம் குடும்பத்தைப் போலவே 10,000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அவலத்தில் உழல்கின்றன.

கடந்த 2002-ஆம் ஆண்டில் பாசிச ஜெயா அரசு 10,000 சாலைப் பணியாளர்களை வேலை நீக்கம் செய்து, வீதியில் வீசியெறிந்தது. மீண்டும் வேலை கேட்டு உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மறியல் எனப் போராடி ஓய்ந்த தொழிலாளர்கள் உயர்நீதி மன்றத்தில் முறையிட்டார்கள்.

'சாலைப் பணியாளர்களை வேலை நீக்கம் செய்தது தவறு; அவர்களுக்கு 6 மாதச் சம்பளத்தைக் கொடுப்பதுடன் 3 மாதங்களுக்குள் மீண்டும் வேலை கொடுக்க வேண்டும்' என்று தீர்ப்பாயமும் உயர்நீதி மன்றமும் தீர்ப்பளித்தன. இத்தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்துக்குச் சென்று 'தடை' கேட்டது ஜெயா அரசு. அதைத் தள்ளுபடி செய்து விட்டது உச்சநீதி மன்றம்.

ஆனாலும் சாலைப் பணியாளர்களுக்கு இன்றுவரை சம்பளம் கொடுக்கப்படவில்லை; வேலையும் கொடுக்கப்படவில்லை. வேலையிழந்து வாழ்விழந்த தொழிலாளர் குடும்பங்கள் உருக்குலைந்து பட்டினியால் பரிதவிக்கின்றன. விரக்தியடைந்த தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; பலர் மனநோயாளிகளாகி விட்டார்கள்.

கடந்த பிப்ரவரியில் தூத்துக்குடி மாவட்டம் நசரேத் அருகிலுள்ள எழுவரைமுக்கி கிராமத்தைச் சேர்ந்த வேலையிழந்த சாலைப் பணியாளரான ஆனந்த்ராஜ், பசியும் பட்டினியுமாக ஒருவார காலம் நடந்தே மதுரைக்கு வந்து வேலை தேடி அலைந்து விட்டு, எம்.ஜி.ஆர். சிலை பீடத்தின் மீது இரவில் படுத்துறங்கியுள்ளார். நள்ளிரவில் வந்த போலீசார் அவரை அடிக்க, கீழே விழுந்து கால் முறிந்து அலறிய அவரை தரதரவென இழுத்துச் சென்று வதைத்ததால், எலும்பு முறிவினால் அவரது கால் பெரிதும் சேதமாகி சீழ்பிடித்து, சிகிச்சைக்குப் பின் மாவுக் கட்டோடு தவிக்கிறார்.

'ஐயோ பாவம்' என்று அனுதாபப்பட்டு ஒதுங்கிவிடக் கூடிய விவகாரங்களா இவை? இல்லை. இவையனைத்தும் ஜெயாவின் பாசிசத் திமிரை நிரூபித்துக் காட்டும் சாட்சியங்கள். நீதிமன்றத்தை அமவதித்த குற்றத்துக்காக பாசிச ஜெயாவுக்குத் தண்டனையில்லை. 40-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் சாவுக்குக் காரணமான கொலைக் குற்றவாளி பாசிச ஜெயாவுக்குத் தண்டனையில்லை. ஆனால், சாலைப் பணியாளர்கள் குடும்பத்தோடு கேள்விமுறையின்றித் தண்டிக்கப்படுகிறார்கள். இந்த அநீதிக்கும் அவமானத்துக்கும் பாசிசத் திமிருக்கும் நாம் பழி தீர்ப்பது எப்போது?



ஆனந்தராஜ்

படிப்பகம்